# வடக்கு-கிழக்கில் சேதமடைந்த தொழிற்சாலைகளை புனரமைக்க 200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் அண்மைக் கால ராணுவ நடவடிக்கைகளில் சேதமடைந்த தொழிற்சாலைகளின் புனரமைப்பிற்கு அரசாங்கம் 200 கோடி ரூபா வினை ஒதுக்கியுள்ளதாக அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இத் தொழிற்சாலைகளைப் புனரமைத்து இவற்றின் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு இதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும் இப்பகுதிகளில் கடற்றொழில், விவசாய அபிவிருத்திகளை ஊக்குவிக்கவும்

(8-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 | பங்குனி: 15 | ஷஃபான் பிறை: 30 | இதழ்: 44
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 28-03-1990

## இந்திய படை வெளியேற்றம் அமெரிக்கா வரவேற்பு

(வாஷிங்டன்)

இலங்கையிலிருந்து இந்தியப் படைகள் முற்றாக வெளியேறியதை அமெரிக்கா வரவேற்றுள்ளது. தொடர்ந்தும் இரு நாடுகளும் நட்புறவைப் பேண வேண்டுமென்றும் அமெரிக்கா இரு தரப்பையும் வேண்டியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சக அதிகாரி திரு. மாகிரட் தட்விலர் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

(8ம் பக்கம் பார்க்க)

★ ஆயுத ஒப்படைப்பு பிரச்சனை

# புலிகளை பொலிஸ்ராணுவத்தில் சேர்ப்பதன் மூலம் தீர்க்கலாம்!

## 8000 தமிழர் படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்

**- அமைச்சர் ரஞ்சன்**

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளை இலங்கை பொலிஸ் படையிலும், இராணுவத்திலும் சேர்த்துக் கொள்வதன் மூலம் வடக்கு கிழக்கில் புலிகளின் ஆயுத ஒப்படைப்பு தொடர்பான சர்ச்சையை தீர்த்துக் கொள்ளலாமென வெளிவிவகார அமைச்சரும். பாதுகாபபு இராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.**

இந்தியப் படைகள் இலங்கையை விட்டு வெளியேறியது தொடர்பாக நேற்று முன் தினம் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலே திரு. ரஞ்சன் விஜயரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் வடக்கு கிழக்கு மாகாண முதல்வரும் அவரது கட்சி அங்கத்தவர்களும் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதால் வடக்கு கிழக்கு மாகாண சபையை இலங்கை அரசே நிர்வகிக்கும்.

எதிர்காலத்தில் மோதல்கள் ஏற்படும் எந்தவொரு சந்தர்ப்பத்தையும் ஜனாதிபதி திரு. பிரேமதாஸா ஏற்படுத்த மாட்டார். இவ்விடயத்தில் அவர் மிகவும் உறுதியாகவுள்ளார்.

### தமிழர்களுக்கு இடம்

பொலிஸிலும், இராணுவத்திலும் எண்ணாயிரம் முதல் ஒன்பதாயிரம் பேர்வரை தமிழர்கள் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் இராணுவப் படைப் பிரிவொன்றும் அமைக்கப்படவுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

நயினாதீவில்

## சிறிலங்கா கடற்படையினரின் சோதனைப் பணிகள் இடைநிறுத்தம்!

(புங்குடுதீவு)

நயினாதீவில் முகாமிட்டிருக்கும் சிறிலங்கா கடற்படையினர் சோதனையிடும் பணிகளை தற்போது இடைநிறுத்தியுள்ளதாக தெரிகிறது.

குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்குச் செல்லும் பிரயாணிகளும், அங்கிருந்து குறிகாட்டுவானுக்குவரும் பிரயாணிகளும், இவ்வாறு சோதனைகளுக்கு உள்ளாக்கப் படுவதில்லை என தெரியவருகிறது.

ஆனால் நயினாதீவு மக்களின் சோதனைகள் தீவிரமாக நடைபெறாத போதிலும் அப்பகுதி மக்கள் பிரயாணம் செய்துவரும் படகுகள் ஒவ்வொரு நாளும் அப்படையினரிடம் வந்து செல்ல வேண்டிய நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லையென தெரிய வருகிறது.

## மாவிட்டபுரத்தில் நேற்று அடையாள உண்ணாவிரதம்

(காங்கேசன்துறை)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தெற்கு வீதியில், அன்னை பூபதி நினைவாக நேற்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் பெரும் எண்ணிக்கையில் இதில் பங்குபற்றினர். அன்னை பூபதியின் பெரிய அளவிலான படம் வைக்கப்பட்டு, மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

உண்ணாவிரதிகள் சுதந்திரப் பாடல்களை இசைத்தவண்ணம் இருந்தனர்.

உண்ணாவிரதம், காலை 7-00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 3-00 மணியளவில் பூர்த்தி அடைந்தது. (86)

சமூக சேவையாளர்

## வைரமுத்து காலமானார்

(யாழ்ப்பாணம்)

சேர் ஒலிவர் குணத்திலகா உள்நாட்டு அமைச்சராக இருந்தபோது நிரந்தரச் செயலாளராகவும், மானிப்பாய் இந்து அபிவிருத்திச் சபையின் நிர்வாகியாகவும், பருத்தித்துறை பரமானந்த ஆசிரம ஆலோசகராக இருந்தவரும், 'ஈழநாடு' முன்னாள் நிர்வாகியுமான திரு. மு. வைரமுத்து அவர்கள் தமது 93வது வயதில் காலமானார்.

(8ம் பக்கம் பார்க்க)

## மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் அபிவிருத்திப்பணிகளிலும்ஈடுபடவேண்டும்

**- நிமால்**

(கிளிநொச்சி நிருபர்)

''தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், பல்வேறு அபிவிருத்திப் பணிகளிலும் ஈடுபட வேண்டும்''

கிளிநொச்சி நகர் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் சிற்றூர் அவை உறுப்பினர்கள் மத்தியில் பேசுகையில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கிளிநொச்சி நகரப் பகுதிப் பொறுப்பாளர் திரு. நிமால் இவ்வாறு குறிப்பிட்டார்.

[8-ம் பக்கம் பார்க்க]

வடமராட்சியில்

## பத்திரிகையாளர் படையெடுப்பு

(வடமராட்சி)

கடந்த சிலநாட்களாக வெளிநாட்டுப்பத்திரிகையாளர்களும் கொழும்புப் பத்திரிகையாளர்களும வடமராட்சிப்பகுதிக்கு வந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

மகாவலி பிரதேசத்தில்

## வடக்குகிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு 25 சத வீத காணிகள் வழங்கப்படும்

(கொழும்பு)

மகாவலி பிரதேச காணிகளை வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாட்டிலுள்ள 227 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த 14,000 குடும்பங்களுக்கு இக்காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காணி நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. தயாரத்ன உத்தரவிட்டுள்ளார்.

மகாவலி 'பி' வலயமான மதுறுஓயாவில் 25 சதவீத காணி தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படவுள்ளது. (சி)

## அடகு நகைகள் மீண்டும் நாளைமுதல் மீளளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகுவைத்த நகைகளை மீளப் பெறுவதற்குப் பணம் செலுத்தியவர்களுக்கு யாழ். பொலிஸ் நிலையத்தில் வைத்து நாளை வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை ஆகிய தினங்களில் நகைகள் வழங்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறைக் கிளையில் 1989 செப்டம்பர் 22ம் திகதி வரையும், பருத்தித்துறைக் கிளையில 1989 செப். 15ம் திகதி வரையும், வல்வெட்டித்துறைக் கிளையில் 1989 ஒக்டோபர் 13ம் திகதி வரையும் பணம் செலுத்தியவர்களுக்கு வியாழக்கிழ

[8ம் பக்கம் பார்க்க]

## ஊர் விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய, பீற்றூட், கோவா, விதைகள் விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 3625)

### தவறிவிட்டது

யாழ் பஸ் நிலையத்திலிருந்து கஸ்தூரியார் வீதியில் அப்பையா கடைச் சந்திக்கு இடையில் நிறுவனப் பணமான 16500/- ஊழியராகிய என்னால் தவறவிடப்பட்டுவிட்டது. தயவு செய்து இதனைக் கண்டெடுத்தவர்கள் மனிதாபிமானத்தின் பேராலும், வேலையின் நிமித்தமும் என்னிடம் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பொ. இரவீந்திரன், மே/பா ஆ. வேலுப்பிள்ளை அன் சன், 50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-3658)

### WANTED

Experienced middle aged Sales Rep. required urgently. Salary & commission Apply: Brite Soap Ind, K. K. S. Road, Mallakam. (C-3645)


# விவசாயத்திற்கு பயன்படுத்தப்படாத காணிகள் சுவீகரிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

''பயன்படுத்தப்படாத விவசாயக் காணிகள் கூடிய திறமையைப் பாவித்து பயன்படுத்தாது போனால் நிர்ப்பந்த நடவடிக்கைகள் மூலம் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டி வரும்.''

இவ்வாறு யாழ். மாவட்ட கமநலச் சேவை சிரேஷ்ட ஆணையாளர் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:- ''பிரதானமாக இந்த வருடம் எமது திணைக்களம் இந்தவிடயத்தில் கூடிய அக்கறை செலுத்தும், விவசாய நிலங்கள் வீணாகப் பயிர் செய்யப்படாதிருப்பது நாட்டுக்கு நஷ்டம். கிராமத்துக்கும் பாரிய இழப்பு தேசிய ரீதியில்பொருளாதாரம் வீணடிக்கப்படுகிறது. இப்படியானகாணிகளை 1979ம் வருட கமநலச்சேவைச் சட்டத்தின் 3ம்பிரிவின்கீழ் நடவடிக்கைஎடுப்பதால் விவசாயிகளுக்குக் காணிகள் இழப்புக்களோடு அசௌகரியங்களும் ஏற்படும்.''

'ஆனபடியால் விவசாயிகள் காணிகளைப் பயன்படுத்த வேண்டும். பயிர் செய்யப்படாத காணிகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு அறிவித்தல்களோடு ஆணையாளர் மேற்பார்வைக் கட்டளை வழங்குவார்.''

இந்தக் கட்டத்திலும் அவர்கள் செயற்படாதுபோனால் உடமை அகற்றும் கட்டளை மூலம் ஆணையாளருக்கு அந்நிலம் சொந்தமாக்கப்படும்.

''பின் அந்தக் காணிகளை ஆர்வத்தோடு விவசாயம்செய்யும் விவசாயிகளுக்கு வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டி ஏற்படலாம.'' (152)


### தேவை

''வில்வம் பழம் தேவை.'' மில்க்வைற், யாழ்ப்பாணம். (ஏ-638)


## சங்கத்திற்கு புதிய லொறி

(பண்டத்தரிப்பு)

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்துக்கு புதிய லொறி ஒன்று விரைவில் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

சுமார் எட்டு இலட்சம் ரூபா செலவில் இந்த லொறிகொள்வனவு செய்யப்படவுள்ளது. (72)

## அன்னைபூபதி எழுச்சிவிழா நடத்த ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கலை கலாச்சார அவையினர் ஏப்ரல் 12, 13, 14 ஆகிய திகதிகளில் கலாச்சார எழுச்சி விழாவை நடத்தஏற்பாடுகள்செய்துள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க கலைகலாச்சாரப் பொறுப்பாளர்கவிஞர்புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

இம்மூன்று தினங்களிலும் அன்னை பூபதி கணபதிப்பிள்ளை நினைவாக கலை நிகழ்ச்சிகளும் விளையாட்டுப் போட்டிகளும் கருத்தரங்குகளும் பட்டிமன்றமும் நடைபெற மிக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மருதநகர் விளையாட்டுத் திடலில் இக் கலை கலாச்சார விழா நடைபெவுள்ளது. (83)

## நினைவஞ்சலிக் கூட்டங்கள்

(மாங்குளம்)

அன்னை பூபதியின் நினைவாக எதிர்வரும் 15ம் திகதி பிரதேச ரீதியிலான விளையாட்டுப் போட்டிகள் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசார குழுவினால் நடைபெறவுள்ளது.

ஏப்ரல் 19ந் திகதி வரை வவுனிக்குளப்பிரதேசத்தில் அன்னை பூபதியின் நினைவாக கூட்டங்கள் நடைபெறும் என்று பொறுப்பாளர் ஜொனி தெரிவித்துள்ளார். (150)


## Jaffna College Institute of Technology VADDUKODDAI

# VACANCIES

Applications are invited from suitable qualified candidates for the following posts.

**1. Lecturer**

Qualification : B. Sc. Engineering (Civil) degree from a recognised University or equivalent qualification with atleast 2 years experience including one year of teaching teachnical subjects.

**2. Assistant Lecturer**

Qualification : B Sc. Engineering degree (Civil or Electrical) from a recognised University OR B. Sc (Double Maths & Physics) of a recognised University and Part I & II A of Engineering Council (London) examination together with minimum of 2 years experience in industry or teaching.

**3. Instructor (Mechanical)**

Qualification : N. D. T. (Mechanical) OR any other equivalent qualifications with experience in industry and teaching technical subjects.

Salary : Negotiable, depending on qualification and experience.

Apply with full Bio-Data to:

**Director**
Jaffna College
Institute of Technology
Vaddukoddai

on or before 10th April 1990.

[ஏ-640]

# கொழும்பில் "ஈழநாடு"

பிரதம விற்பனையாளர்

எஸ். கே. ரேட் சென்ரர்,
[S. K. TRADE CENTRE]
210, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12.
தொலைபேசி:- 23580

# மக்கள் வங்கி

## அடகு நகைகள் மீளளித்தல் யாழ்ப்பாண மாவட்டம்.

பின்வரும் கிளைகளில் அடகு வைத்து, மீளப்பெறுவதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அருகில் இருக்கின்ற பொலிஸ் தொடர் மாடிக் கட்டிடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸ் நிலயத்தில் வைத்து கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்.

| | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|
| 1. ஊர்காவற்றுறைக் கிளை (22-09-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 29-3-90 | வியாழன் |
| 2. பருத்தித்துறைக் கிளை (15-9-89) வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 29-3-90 | வியாழன் |
| 3. வல்வெட்டித்துறைக் கிளை (13-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 29-3-90<br>30-3-90 | வியாழன்<br>வெள்ளி |
| 4. நெல்லியடிக் கிளை (15-9-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 30-3-90<br>31-3-90 | வெள்ளி<br>சனி |
| 5. சுன்னாகம் கிளை (9-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 30-3-90<br>31-3-90 | வெள்ளி<br>சனி |
| 6. காங்கேசன்துறைக் கிளை (22-9-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 31-3-90 | சனி |

மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 8-30 மணி தொடக்கம் நண்பகல் 1-00 வரை அடகு நகைகள் மீளளிக்கப்படும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமுகந் தந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்,

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள மற்றைய கிளைகளின் நகைகள் சித்திரை மாதம் 3ஆம் திகதி முதல் மீளளிக்கப்படும். அது பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

பிராந்திய முகாமையாளர்.

மக்கள் வங்கி, யாழப்பாணம்,

(ஏ 652)

# A/L விஞ்ஞான மாணவர்கட்கு!

**91 அசேதன இரசயனம்**
SAT. & SUN. 12-30 — 1-30
ஆரம்பம்:- 31 - 03 - 1990
ஆசிரியர்:- Mr. நாகரட்ணம் B.Sc.

**90 வட்ட இயக்கம்**
MON., WED. & FRI. 1-30— 3-00

**தொகையீட்டின் பிரயோகம்**
MON., WED. & FRI. 3-00 — 4-30
ஆரம்பம்:- 02 - 04 - 90

**Pure & App. [தூரித மீட்டல்]**
TUE. & THU 8-00 — 10-00
ஆரம்பம்:- 03 - 04 - 90
ஆசிரியர்:- Mr. கணேசன் B.Sc. (Hons)

3-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(ஏ-639)

# ★ அமைதி குலைகிறது தென் ஆபிரிக்க தலைநகரில் கலவரம்

# 70 கறுப்பினத்தவர் சுட்டுக்கொலை

## பேச்சுக்களைகுழப்ப சதியென கண்டனம்

(ஜொகனஸ்பேர்க்)

**தென்ஆபிரிக்க தலைநகர் ஜொகனஸ்பேர்க்கில் நேற்று முன்தினம் கறுப்பின ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிசாருக்குமிடையில் இடம்பெற்ற கடும்மோதலில் பத்து பொலிசார் உட்பட எண்பது பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். இதையடுத்து அப்பகுதியில் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டு இராணுவம் பலத்த காவலில் ஈடுபட்டுள்ளது.**

இச்சம்பவம் தென்ஆபிரிக்க அரசுக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸிற்கும் இடையில் நடைபெறும் சமாதானபேச்சுக்களைக் குழப்ப மேற்கொள்பட்ட ஒரு முயற்சியாகுமென இருதரப்புத்தலைவர்களும் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஜொகனஸ்பேர்க்கில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்திய கறுப்பினத்தவர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட பொலிசார் மீது திடீர் தாக்குதலை மேற்கொண்டதையடுத்தே மோதல்கள் ஆரம்பமாகியது. இரு தரப்பும் துப்பாக்கிகளைப் பாவித்தே மோதல்களில் ஈடுபட்டனர்

இதன்போது 80 பேர் வரை கொல்லப்பட்டனர். 300க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். கடந்த சிலமாதங்களாக தென்ஆபிரிக்காவில் ஏற்பட்டுள்ள அமைதி நிலையை இச்சம்பவம் பெருமளவில் பாதித்துள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தென்ஆபிரிக்காவில் அமைதியும், சமாதானமும் ஏற்படுவதை விரும்பாத சக்திகளே இவ்வன்முறையைத் தூண்டிவிட்டதாக பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (சி)

## ஜி. சி. ஈ. (சாதாரண) அனுமதி அட்டைகள்

(கொழும்பு)

ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைத்

(5ம் பக்கம் பார்க்க)

## புன்னலைக்கட்டுவனில் நடமாடும் கால்நடை வைத்திய நிலையம்

(காங்கேசன்துறை)

புன்னலைக்கட்டுவனில் நடமாடும் கால்நடை வைத்திய நிலையம் ஒன்று இயங்க ஆரம்பித்துள்ளது.

தெல்லிப்பழை கால்நடை வைத்திய அதிகாரியின் ஏற்பாட்டின்பேரில் வாரந்தோறும் வியாழக்கிழமைகளில்

(5ம் பக்கம் பார்க்க)

## நான்கு விமானவிபத்துகளில் 30 பேர்வரை பலி!

### கொலம்பியாவில் அதிர்ச்சிச் சம்பவம்

(பொகோடா)

கொலம்பியாவில் இடம்பெற்ற நான்கு வெவ்வேறு விமான விபத்துக்களில் 30 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். நேற்று முன் தினம் நண்பகல் அரைமணி நேரத்துள் இந்த நான்கு விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

கொலம்பியாவின் தலைநகரில் இடம்பெற்ற விபத்தொன்றில் விமானம் உயர்ந்த கட்டிடம் ஒன்றில் மோதி நொருங்கியது. அதில் பயணம் செய்த எண்மர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

கிராமப்புறத்தில் கோப்பித் தோட்டமொன்றில் வெடித்துச்சிதறிய விமானமொன்றிலிருந்த ஐந்துபேர் கொல்லப்பட்டனர். இதேபோல் மற்றுமொரு விமானமும் விபத்தொன்றில் சிக்கியதில் அதிலிருந்த நாடகநடிகர்கள் பத்துபேர் கொல்லப்பட்டனர்.

போதைவஸ்து கடத்தலில் ஈடுபடும் கும்பல் ஒன்றை துரத்திச்சென்ற கொலம்பிய விமானப்படை விமானம் ஒன்று மலையுடன் மோதியதில் அதிலிருந்த 7 விமானப்படை வீரர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

மேற்படி நான்கு விமான விபத்துகளும் நண்பகலில் சுமார் அரைமணி நேரத்துள் நடைபெற்றுள்ளது. இவை அனைத்தும் கொலம்பியாவின் உள்ளூர் பயணங்களின் போது இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## உங்கள் பிரச்சனை என்ன?

**கேள்வி:** சிங்களம் மட்டும் சட்டத்தால் பாதிக்கப்டோருக்கு மறுநியமனம் கொடுத்துள்ளதாக பத்திரிகைச் செய்தி ஒன்று குறிப்பிடுகிறது. இதன்பிரகாரம் நாம் விண்ணப்பங்கள் அனுப்பியும் இதுவரை எவ்வித பதிலும் இல்லை. எமது நிலை என்ன?

— சிங்களம் மட்டும் சட்டத்தால் பாதிக்கப்பட்டோர்.

**பதில்:** அரசாங்க சுற்றுநிருப இலக்கம் 3681ன்படி சிங்களம் மட்டும் சட்டத்தால் பாதிக்கப்பட்டோர் நிவாரணம் பெறலாம் நீங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களத்தோடு தொடர்புகொண்டு தங்கள் விண்ணப்பம் அச்சுற்று நிருபத்திற்கேற்ப அனுப்பப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். (152)

## ‘குளோறின்’ வாயுக் கசிவு; 800 பேர் ஆஸ்பத்திரிகளில்!

### தாய்வானில் சம்பவம்

[லண்டன்]

‘தாய்வானில் இரசாயன தொழிற்சாலை ஒன்றிலிருந்து வெளியேறிய ‘குளோறின்’ வாயுக்கசிவால் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் சுவாச அங்கம் பாதிக்கப்பட்ட நிலையில் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நகர்ப்புறத்திலுள்ள இரசாயன தொழிற்சாலை ஒன்றிலிருந்து ‘குளோறின்’ வாயுக் கசிவாகவும் நீருடன் அதிகளவும் கலந்த நிலையில் வெளியேறியதையடுத்தே பொதுமக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் சுமார் 800 பொதுமக்கள் மூச்சுவிட முடியாத நிலையில் அவஸ்தைப்பட்டு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து இத்தொழிற்சாலையை உடனடியாக மூடிவிடுமாறு கோரி ஆயிரக்கணக்கானோர் தொழிற்சாலைமுன் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். (சி)

## இந்திய அமைதிப்படை காஷ்மீர் எல்லையில்

[புதுடில்லி]

இலங்கையிலிருந்து வெளியேறிய இந்திய அமைதிப் படையினர் தற்போது காஷ்மீர் எல்லைப் புறங்களில் நிலை கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஜம்மு காஷ்மீர் தீவிரவாதிகளின் தாக்குதல்களை சமாளிக்கும் விதத்தல் இவர்கள் இலங்கையில் பெற்ற அனுபவம் உதவும். தற்போது சிக்கல் மிகுந்த இடங்களிலும் எல்லைப்புறங்களிலும் இவர்கள் நிலைகொண்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக ஜம்மு-காஷ்மீரில் தீவிரவாத நடவடிக்கைகள் பெருமளவு அதிகரித்திருப்பதும் பல தாக்குதல்கள் இடம்பெறுவதும் தெரிந்ததே. [சி]

## வல்லிபுர மாயோன் பிள்ளைத்தமிழ் வெளியீட்டு விழா

[தென்மராட்சி]

மாவை முருகன் பிள்ளைத் தமிழ் சுதுமலை அம்மன் பிள்ளைத் தமிழ் என்பன பாடிய பண்டிதர் மு. கந்தையா வல்லிபுரப் பெருமான் மீதும் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். அவரின் பாடல்களை இந்து மக்கள் படித்துப் பயன்பெறவேண்டும்.

வல்லிபுர மாயோன்மீது பண்டிதர் மு கந்தையாவால் பாடப்பெற்ற வல்லிபுர மாயோன் பிள்ளைத்தமிழ் நூல் வெளியீட்டு விழாவில் நூலை வெளியிட்டுவைத்த பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு கூறினார்.

ஊரெழு கணேசவித்தியாலயத்தில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலநிதி பாலசுந்தரம் தலைமையில் விழா நடைபெற்றது.

செல்வி தங்கம்மா தொடர்ந்து பேசும் போது இந்துக்கள் திருமுறைகளைச் சிவலாயங்களில் ஓதிவருகிறார்கள். ஈழத்தில் சில விஷ்ணு தலங்கள் மட்டும் உண்டு. யாழ்ப்பாணத்தில் வல்லிபுரக்கோவில் வரலாற்றுடன் தொடர்புடையது. இந்துக்கள் பெருமளவில் வழிபடுகின்றனர். யான் கல்விகற்கும்போது ஆழ்வார் பாடல்களை படித்ததுண்டு. பின்னர் இவ்வாலயத்தில் உரையாற்றும் சந்தர்ப்பமும் கிடைத்தது. இந்நூலில் உள்ள பாடல்களை இந்து மக்கள் படித்துப்பயன்பெறவேண்டும் என்றார்.

அதிபர் திரு. சி. பாலசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார். இராமநாதன் நுண்கலைப்பீட இசையாசிரியர் சங்கீத பூஷணம் திரு. வி எம். நவரத்தினம் சில பாடல்களைப் பாடினார்

கலாநிதிபாலந்தரம் தலைமை உரையில் சிறப்புமிக்க வல்லிபுரமாயோன் மீது பாடப்பட்ட இந்நூல் வரலாற்றில் பிரதான இடம் பெறவேண்டியது என்று பாராட்டினார்.

நடனமேதை கவிஞர் வீரமணி ஐயர் வாழ்த்திப்பாடினார் ஈழத்துச் சிவானந்தன் உரையாற்றினார் சரசாலை இந்து இளைஞர் மன்றச்செயலாளர திரு க. சிவசங்கரநாதன் விரிவுரையாளர் த. நாகேஸ்வரனும் கலந்து கொண்டார்.

## பாகிஸ்தானின் தலையீட்டை தொடர்ந்தும் சகிக்கமுடியாது

### இந்திய ஜனாதிபதி எச்சரிக்கை

(புதுடில்லி)

இந்தியாவின் உள்விவகாரங்களில் பாகிஸ்தான்னின் தலையீட்டைத் தொடர்ந்தும் சகிக்கமுடியாதென இந்திய ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் எச்சரித்துள்ளார். இதன்மூலம் பாகிஸ்தான் விரும்பத்தகாத விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் ஜனுப் யசிர் அரபாத்திற்கு அளித்த விருந்தின் போது உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி திரு. வெட்கட்ராமன் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்; இந்தியாவின் உள் விவகாரங்களில் பாகிஸ்தானின் தலையீடு கடந்த பல வருடங்களாக இருந்துவருகிறது. இதற்கு போதிய ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. எனினும் இது தொடர்பான இந்தியாவின் பல கோரிக்கைகளையும் பாகிஸ்தான் அலட்சியப்படுத்தியுள்ளதுடன் இந்தியாவின் உள்விவகாரங்களிலும் பிரிவினை வாத செயல்களிலும் ஈடுபட்டு வருகிறது.

காஷ்மீர் விவகாரம் குறித்து 1972ம் ஆண்டு எட்டப்பட்ட சிம்லா உடன்பாடு மூலம் பேச்சுக்கள் நடத்தியே தீர்வுகாணவேண்டுமென்றும் வலியுறுத்திய ஜனாதிபதி பலஸ்தீனியமக்களின் சுதந்திரப்போராட்டத்திற்கு இந்தியா தொடர்ந்தும் சகல ஆதரவையும் வழங்கும் என்றார். (சி)

### மணிவாக்கு

தம்மிடத்தில் உள்ள குற்றத்தை அறிந்து நீக்காத போது உடம்பில் மறைப்பதற்குரிய பகுதியை மட்டும் ஆடையால் மறைத்தல் புல்லறிவாகும்.

— நீதிநூல்.

## நமது நோக்கு

# அன்னை பூபதிக்கு அஞ்சலி

''கெடுக சிந்தை கடிது இவள் துணிவே!
மூதிற் பெண்டிராதல் தகுமே......

— ஒக்கூர் மாசாத்தியார்.

இது சங்க நூலான புறநானூற்றிலே வீரப் பெண்களைப் பாராட்டிப் பாடப்பட்டது.

அக்காலப் பெண்கள் நாட்டைக் காக்கப் போராடிய மக்களுக்கு உறுதுணையாக இருந்தார்கள்: வீரத்தை ஊட்டினார்கள்,

போரிலக்கணத்திலே, பெண்களின் வீரத்தைப் பாராட்ட 'மூதின் முல்லை' என்ற ஒரு துறையை வகுத்தவர்கள் தமிழர்கள்.

நவீன வாழ்க்கை முறைகளிலே வீரம், தியாகம் என்ற பண்புகள் கிலோவிற்கு என்ன விலை என்று கேட்குமளவிற்கு வந்துவிட்டன. ஆண்டாண்டுகாலமாக அடிமைகளாக வாழ்ந்து பழக்கப்பட்டதினால் வீரத் தாய்மார், தியாகத் தீபங்கள் பற்றிய செய்திகளும், கதைகளும் ஏட்டளவிலேயே இருந்துவிட்டன.

இன்று நாட்டளவிலேயே மீண்டும் வீரத் தாய்மார்களை எம் கண்முன்னாலேயே காண்கிறோம்!

கிழக்கு மாகாணத்திலே உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த அன்னை பூபதி அவர்கள் ''மூதின் முல்லை'' இலக்கணத்திற்கு இலக்கியமாகிவிட்டார்.

படையினரின் தொல்லைக்கு ஆளாகி அவரது குடும்பத்திலே இருவரைப் பறிகொடுத்தவர். எனினும் அவரது நாட்டுப் பற்றோ, தியாகப் பற்றோ சிறிதளவும் குறையவில்லை.

''நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் வேண்டும்; பேச்சுவார்த்தைக்கு அழைக்கவேண்டும்!'' — இது அவர் முன்வைத்த கோரிக்கைகள். அதற்காக அவர் அன்புவழியில், அஹிம்சை நெறியில், பரிசுத்தமான முறையிற் பட்டினி கிடந்தார்.

அவரது உண்ணாவிரதத்தைத் தடுக்க மாசுபடுத்த பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. உறுதி குறையவில்லை; உற்சாகம் குன்றவில்லை!

சொந்த நன்மைக்காகவல்ல, தமது இனத்தின் விடுதலைக்காக இந்த உண்ணாவிரதத் தவம் புரிந்து உயிர் நீத்துத் தியாகத் தீபமாகிவிட்டார்.

சென்ற மார்ச் 19 முதல், ஒரு மாத காலத்துக்கு அவரது நினைவுபோற்றும் நிகழ்ச்சிகள் பெருகிக்கொண்டிருக்கின்றன.

அடையாள உண்ணாவிரதங்கள் சிரமதான நிகழ்ச்சிகள், அஞ்சலிக் கூட்டங்கள்......! நன்றி மறவாத பண்பு இன்னும் நம்மிடமிருந்து முற்றாக நீங்கவில்லை.

போர்க்களத்து மடிந்த வீரர்களுக்கு வீரக்கல் நட்டுப் போற்றுவது தமிழர் மரபு. உயர் லட்சியத்திற்காக 'வடக்கிருத்தல்' என்னும் பட்டினி விரதமிருந்த கோப்பெருஞ் சோழன் போன்ற பெரு வீரர்கள் நடுகல்லாயினர் என்ற வரலாற்றுப் பெருமை நமக்குண்டு!

அந்த வரிசையில், அன்னை பூபதி அவர்கள் 'முழூஉ வள்ளுவரம் உணக்கும்' வீரத் தாயாகி, தியாகத் தீபமாகி கல்லடியில் நடுகல்லாகின்றார்!

## தவக்கால நற்சிந்தனை

### கனவுலகில் நாம்

உண்மைகள் கசப்பதுமுண்டு, சுடுவதுமுண்டு. மனச்சாட்சியை வேதனைப்படுத்துவதுமுண்டு. ''என் தந்தை இந்நேரம் வரை செயலாற்றுகின்றார் நானும் செயலாற்றுகின்றேன்'' என்ற வார்த்தை சட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த யூதர்களையும் அதன் தலைவர்களையும் சுடுகின்றது. கிறிஸ்துவின் வாழ்க்கை முறை அவர்களுக்கு அபூர்வமாக இருக்கின்றது. எங்களுடைய வாழ்க்கைமுறை சில சமயங்களில் எங்களுக்கே அபூர்வமாக இருக்கின்றது. ஏனெனில் நாம் பெரும்பான்மையான தடவைகளில் கனவுலகிலேயே வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம். எப்படி வீடு கட்டலாம், இப்படிக் காணியைப் பறிக்கலாம். அவருடைய ஊதியத்தில் பாதியைப் பறிக்கலாம் இவ்விதம் விற்று காசு உழைக்கலாம் என்று திட்டம் தீட்டுவதன் காரணத்தினால் எமது வாழ்வுமுறை எமக்கும், எமது எதிர்காலத்திற்கும் எமதுகுடும்பத்திற்கும்பொருந்தாத வாழ்க்கை முறையாக இருக்கின்றது. கிறிஸ்து வாழ்விலே வெற்றியூட்டினாரென்றால், அவர் தந்தையோடு சேர்ந்து செயல்பட்டார். நாம் கிறிஸ்துவோடுசேர்ந்து செயல்படப் பயப்படுகின்றோம். ஏனெனில் கிறிஸ்து எம்மை முழுமையாக புது மனிதர்களாக மாற்றிவிடுவார் என்ற பயத்தினால்.

அருட்திரு அ. லோறன்ஸ்

சாவகச்சேரி.

# வெள்ளி விழாக் கண்ட வேலானந்தனுக்கு நல்லாசி!

ஈழத்து நடனக்கலையில் தனியிடம்பெற்ற வேல் ஆனந்தன் வெள்ளிவிழாக் கண்டிருக்கின்றார்.

நெடுந்தீவைச் சேர்ந்த அருளானந்தன் 1953ல் அன்றைய பிரதமர் சேர். ஜோன்.முன்னிலையில் நெடுந்தீவில் நடைபெற்ற நிகழ்ச்சியிற் கலந்திருக்கின்றார். ''பாமா விஜயம்'' நாட்டிய நிகழ்ச்சியில் நாரதராகப் பங்கேற்றிருந்தார்.

விசேட பயிற்சி பெறப் புதுடில்லிக்குச் சென்றிருக்கின்றார். அங்குள்ள கேரள கலா கேந்திரத்தில் நடனம் கற்றார். கோபிநாத்திடம் கதகளியைப் பயின்றார்.

தஞ்சாவூர் பந்தனை நல்லூர் மரபிற் பயின்ற சுப்பிராய பிள்ளையிடம் பரதநாட்டியம் பயின்றிருக்கிறார்.

புதுடில்லியிற் பயின்றபோது பிரபல கலைஞர்களுடன் சேர்ந்து ''ராம் லீலா'' நாட்டிய நாடகத்திற் பங்கேற்றிருந்தார். இது 45 முக்கிய நகரங்களில் அரங்கேறியது. அதில் இவர் ஏற்ற பாகம் ''இந்திரஜித்'' இலங்கையிலிருந்து சென்ற கலைஞர், இலங்கை வேந்தன் மகன் 'இந்திர ஜித்தாகவே' டங்கேற்றது வெகு பொருத்தம் தான்!

புதுடில்லிப் பயிற்சிக்குப்பின் கேரளாவிலும் உயர் கலைஞர்களிடம் பயிற்சிபெற்றிருக்கிறார் திருவனந்தபுரத்தில் உள்ள விஸ்வகலாகேந்திரத்தில் சேர்ந்திருக்கிறார். அன்று இவருடன் கூடப்பயின்ற பலர் கலையுலகில் இன்றும் புகழோடு விளங்குவது பெருமைக்குரியது.

யாழ். திருநெல்வேலியில் 1966ல் ''கலைக்கோயில்'' என்ற பெயரில்நடனப்பாடசாலையை ஆரம்பித்தார். அன்று முதல் அருளானந்தம் வேல் ஆனந்தன் ஆகினார். 1970ல் நடன விரிவுரையாளராக நியனம் பெற்றார்.

இவர்தயாரித்தஇசை நாடக நிகழ்ச்சிகள் பல; இவரிடம் பயின்ற பலர் இன்று பல பாடசாலைகளில் நடன ஆசிரியர்களாக உள்ளனர்.

1977ல் இனக்கலவரத்தின் அக்கிரமங்களை அடிப்படையாகக்கொண்ட 'பஸ்மாசுரன்' பலரது உள்ளங்களைச் சிலிர்க்க வைத்தது. சிந்திக்க வைத்தது.

1982ல்மேற்கு நாடுகளுக்குக் கலைப்பணியாகச் சுற்றுலா சென்றார் பல நிகழ்ச்சிகள் மூலம் புகழ்பெற்றார்.

கலைத்துறையில் 25 ஆண்டுகளைப் பூர்த்திசெய்த அன்னாருக்கு ஈழத்துக் கலைஞர்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்,

கலைகளுக்குப் புத்துயிர் அளிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுவரும் இன்றைய காலகட்டத்தில் வேல் ஆனந்தன் போன்ற பண்பட்ட கலைஞர்களின் பங்களிப்பும் அவசியம். அவரது கலைப்பணி தொடர நல்லாசிகள் வழங்குகிறோம்.

— சிவா

### இன்று நினைவு தினம்:

# தேரடிக்கு பெருமை கொடுத்த செல்லப்பர்

பத்தொன்பதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களில்கடையில் சுவாமிகள் பிரதானமானவர். இவருடைய பூர்வ சரித்திரம் பற்றி நிச்சயமாக ஒன்றும் கூறமுடியாது. பெரியகடைப் பகுதியில் அதிகம் சஞ்சாரம் செய்தமையால் கடையில் சுவாமிகள் என அழைக்கப்பட்டார்.

இவரின் சீடர்களில் ஒருவர் யோக சுவாமிகளின் குருவான செல்லப்பா சுவாமிகள் ஆவர். இவர் தந்தையார் வல்லிபுரம், தாயார் பொன்னர் ஆவார். இவர்கள் வட்டுக்கோட்டையில் இருந்து கமம் செய்யும் நோக்குடன் நல்லூரில் குடியேறினர். இவர்களுக்கு இரண்டு புத்திரர் இரண்டு புத்திரிகள். புத்திரர்களுள் மூத்தவர் செல்லப்பா சுவாமிகள். இவரின் சகோதரி செல்லாச்சி என்பவருடன் சுவாமிகள் பிற்காலத்தில் வாழ்ந்து வந்தார். இப்பொழுதும் சுவாமிகளின் கொட்டில் தேர்முட்டிக்கு எதிரே காணப்படுகிறது. இவருடைய உறவினர் இப்பொழுது நல்லூர் தெற்கு வீதியில் வசித்து வருகின்றனர். நல்லூர் பிரபல வைத்தியர் சின்னத்துரை சுவாமிகளின் மைத்துனரும் ஆவார்.

சுவாமிகள் யாழ்ப்பாணம் கச்சேரியில் கடமையாற்றியவர். வேலையில் இருக்கும் போது ஆன்மீகத்துறையில் நாட்டம் ஏற்பட்டமையால் வேலையை விட்டு விட்டார்.

சுவாமிகள் தேரடியில் தியானத்தில் இருக்கும்பொழுது தான் குருதரிசனம் கிடைக்கப்பெற்றார். குருநாதரைச் சந்தித்தபின் உலகத்தொடர்புகள் எல்லாவற்றையும்விட்டு தேரடியைத் தமது இருப்பிடமாகக் கொண்டார்.

சாதாரண மக்கள் இவரை விசரன் எனக் கருதினாலும் ஒரு சிலர் இவரின் அதீதநிலையை உணர்ந்தனர். அவர்களில் காலஞ்சென்ற விதானையார் திருஞானசம்பந்தர், துரையப்பர் ஆகியோரும் அடங்குவர்.

ஒருநாள் சுவாமிகளும், யோகர்சுவாமிகளும் பெரிய கடையில் ஒருசட்டிக் கடைக்கு முன்னால் பிச்சைக்கு நின்றனர். வெகுநேரம் வெய்யிலில் நின்றபின் கணக்கப்பிள்ளை இரண்டு சதம் கொண்டுவந்து கொடுத்தார். அதற்கு சுவாமிகள் ''இன்று நன்றாக உணர்ந்தோம். போசனமென்பது தானுழந்துண்ணல் என்பதல்லவோ ஆன்றோர் வாக்கு'' என்று கூறினார்.

இப்படியிருக்கும் காலத்தில் சுவாமிகள் மேற்பார்வையில் யோகர் சுவாமிகளும் கதிரவேலு என்பவரும் நாற்பது நாட்கள்வரை கடுந்தவம் புரிந்தனர். செல்லப்பா சுவாமிகளின் கிரகஸ்த சீடரான திருஞானசம்பந்தர் சாதனை செய்வோருக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவந்தார்.

ஒருநாள் சுவாகள் எல்லோரையும் எழுப்பி துரத்திவிட்டார். யோகர் சுவாமிகள் கிழக்கு நோக்கிப் புறப்பட்டார். மற்றவர் எங்கு சென்றாரென்பது புதிராகவே உள்ளது.

குருநாதர் சமாதியடைந்ததுபற்றி யோகர் சுவாமிகள் கூறும்போது பகல் எல்லாம் சுற்றிவிட்டு வந்து கொட்டிலில் படுத்தார். அப்பொழுது அங்கு ஒருவர் சென்றதாகவும் அவரை வெளியே சென்று வாவென்றுகூற வந்தவர் வெளியே சென்றதும் 'டோம்' என்றொரு சத்தம் கேட்டதாகவும் திரும்பி வந்துபார்த்தபோது சுவாமிகள் கை கால்களை நீட்டிக்கொண்டு தடிபோல் இறந்திருக்கக் காணப்பட்டார் என்றும் கூறினார்.

இந்த சுவாமிகளின் மருகன்

(5-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### சுன்னாக நகர சுகாதார சீர்கேடுகள்

யாழ். மாவட்டத்தின் பிரதான நகரங்களில் ஒன்றாகிய சுன்னாகம் பல வருடங்களாக சுகாதார சீர்கேடுகளை எதிர்நோக்கிய வண்ணமுள்ளது. முக்கியமாக பிரதான சந்தையைஒட்டிய சிறுவீதிகளெல்லாம் குப்பை கூழங்களுடன் காட்சிதருகின்றன. வாழைத் தண்டுகளும், வாழையிலைகளும் குவிந்துபோயுள்ளன. 10 வருடங்களுக்கு மேலாக வீதிகள்திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுவதால் மழை காலங்களில் இவ்விடங்களில் நீர் தேங்கிநின்று பிரயாணிகள் இதனால் பல கஷ்டங்களை எதிர் நோக்குகிறார்கள்.

இவ்வீதியிலுள்ள 20 ஆண்டுகளுக்கு மேலாக கட்டப்பட்ட பொது மலசல கூடம் உரிய காலங்களில் சுத்திகரிக்கப்படாமையினால் துர்நாற்றம் வீசுகின்றது.

சுன்னாகம் பட்டினசபையும் சோலைவரியை மாத்திரம் வருடாவருடம் அறவிடுவதில் முன்நிற்கின்றனர். அதேவேளை சுகாதார சீர்கேடுகளைக் களைவதிலும் ஆர்வம் வேண்டும். இதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பார்களா?

த. மதிதரன்.

சுன்னாகம்.

## பலதும் பத்தும்

### செவ்வாய் தோஷம்

செவ்வாய் தோஷம் பலருக்குத் 'தலைவலியாக' உள்ளதல்லவா? சில தவறான விளக்கங்களாலும், அரைகுறைச் சோதிட அறிவினாலும் 'தலைவலி' சில வேளைகளில் 'திருகுவலி'யாகமாறுவதும் உண்டு

செவ்வாய்க்கிரகத்திற்கும் குருதிக்கும் தொடர்புண்டு என்பதைச் சோதிடநூல்கள் வலியுறுத்துகின்றன.

இதில் உண்மையுண்டா? யாழ்.மருத்துவபீடமாணவி ஒருவர் இரு வருடங்களுக்கு முன் இது பற்றி ஓர் சிறிய ஆய்வை மேற்கொண்டிருந்தார்.

ஒருவருடைய சாதகத்திலே செவ்வாய் இருக்கும் இடத்திற்கும், அவருடைய குருதியின் Rh தன்மைக்கும் தொடர்பிருப்பதாக அறிந்துள்ளார். ஏழிற் செவ்வாய் உள்ள பெண்களில் 63 சதவீதத்தினருக்கு 'Rh நெகட்டிவ்' காரணியுண்டாம்! குழந்தைப்பேறு, குருதி வழங்கல் ஆகியவற்றைப் பாதிக்கும் காரணிகளில் ஒன்று இந்த Rh விவகாரம்.

இதுபற்றிய ஆய்வுகள் தொடரவேண்டும்; மூடநம்பிக்கை என்று எல்லாவற்றையும் ஒதுக்கிவிடாது, ஆய்வுகள் மூலம் சில உண்மைகளை வெளிப்படுத்தினால், பலரது 'தலைவலிகள்' குறைய உதவுமல்லவா?

வாணி

# "அன்னை பூபதியின் இலட்சியம் ஈடேற தமிழ்மக்கள் பாடுபடவேண்டும்" — நிமால்

[கிளிநொச்சி நிருபர்]

தியாகத்தாய் அன்னை பூபதியின் இலட்சியம் ஈடேற தமிழ் மக்கள் பாடுபடவேண்டும் என்று கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் இடம் பெற்றுவரும் அன்னை பூபதி நினைவு வைபவத்தில் இடம் பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையில தமிழீழ விடுதலைப் புலிகஅ மக்கள் முன்னணியின் கிளிநொச்சி நகர்ப் பொறுப்பாளர் திரு நிமால் குறிப்பிட்டார்.

அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு நிறைவு அஞ்சலி வைபவமும் உண்ணாவிரதமும் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கிளிநொச்சி நகர் சிற்றூர் அவை ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த உண்ணாவிரத வைபவத்தை திருமதி மனோகரி சரவணபவானந்தன், திருமதி யசோதரா விக்கினராசா ஆகியோர் தீபமேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

டாக்டர் கே. திருலோக மூர்த்தி தலைமையில் இடம் பெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் புலிகளின் கிளிநொச்சி நகர் பொறுப்பாளர் திரு. நிமால் மேலும் பேசுகையில்; நாம் எத்தனையோ இன்னல்களைக் கடந்து இனவிடிவிற்காக போராடி வருகிறோம். இப் போராட்டத்தில் அனைத்து தமிழ்மக்களும் பங்காளிகளாக வேண்டும். இன்று இந்த வைபவத்தில் ஆர்வத்துடன் மாணவர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களும் பங்குபற்றி வருவது மகிழ்ச்சியைத் தருகிறது. அன்னை பூபதி தன்னை இம்மண்ணுக்கு அர்ம்பணித்தாலும் அன்னையின் குறிக்கோள் ஈடேறும்காலம் வெகு தொலைவிலில்லை.

கனிஷ்ட மகாவித்தியலாய அதிபர் ஜெ. எம். பி. ஜெயராஜா, ஆசிரியர் திரு. தனராஜா, கணேசபுரம் சிற்றூரவை செயலாளர் திரு இராஜகுலம், மாணவன் செல்வன் வேல்மகாலிங்கம், ஆசிரியை திருமதி கோ. தில்லையம்பலம் திரு அ. இராதாகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றினர்.

இவ்உண்ணாவிரதம் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் நடைபெறுமென்றும் சகல பகுதி மக்களையும் இதில் கலந்து கொள்ளுமாறும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி நகர் சிற்றூரவைத் தலைவர் திரு. இ. சரவணபவானந்தன் தெரிவித்தார். (83)

## சாரணத் தந்தை தினம்

(தென்மராட்சி)

பளை மகாவித்தியாலய சாரணர் குழுவினர், சாரணியத் தந்தை பேடன்பவல் தினத்தினைக் கொண்டாடினர்.

பேடன்பவல் தின கட்டுரை, பேச்சுப் போட்டிகளில்வெற்றியீட்டியோர்க்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

சாரணர் கண்காட்சியும் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கல்வி அதிகாரி திரு. எஸ். கமலநாதன் கலந்து கொண்டார்.

## புன்னாலைக்கட்டுவனில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையம் இயங்கிவருகிறது.

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள அரச மருத்துவமனைக் கட்டிடத்தில் இந்நிலையம் இயங்கிவருகிறது.

இப்பகுதி கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள நோய்கள் குறித்து இவ்வைத்திய நிலையத்தில் தெரிவித்து நன்மையடையுமாறு கோரப்பட்டுள்ளனர்; (86)

## ஜி. ஸி. ஈ.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை அனுமதி அட்டைகள் பெற்றுக் கொள்ளாதவர்கள் பரீட்சைத் திணைக்களத்தோடு தொடர்பு கொள்ளுமாறுபரீட்சைப்பகுதி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளாயின் பெயர், பாடங்கள், பரீட்சை ஸ்தானம், தபால் அலுவலகப் பதிவு எண், பற்றுச்சீட்டு இலக்கம், பணம்கட்டிய பற்றுச் சீட்டு ஆகியவற்றோடு பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (152)

## இன்று நினைவு தினம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வயலின் ஆசிரியர் சபாரெத்தினம் ஈமக்கிரியைகளைச் செய்தார்.

இவர் சமாதியடைந்தது பங்குனி மாத அச்சுவினியாகும். இன்று இவர் வாழ்ந்த இடத்தில் விசேட பூசையும் மகேஸ்வர பூசையும் இடம் பெறுகிறது!

''முழுதும் உண்மை'' ''எப்பவோ முடிந்த காரியம்'' நாமறிவோம்.''

—கந்தசாமி செந்தில்குமரன்.

## "சமய உணர்வுள்ள மக்களை உருவாக்க வேண்டும்"

(நாவற்குழி)

புனிதத் தன்மை வாய்ந்த இந்து சமயத்தின் கலை, கலாசாரங்கள், பாரம்பரியங்களை வெளிக்கொணராது இன்றைய மக்கள் மேலைநாட்டு நாகரிக முறைகளைப் பின்பற்றுவதால் எமது கலை, கலாசாரம் அழிந்துபோகின்றது.''

இவ்வாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத்தலைவர் திரு. வீ. கே. தனபாலன் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற பதினைந்தாவது கொடித்தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோது கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- சைவர்கள் தமது சமய உண்மைகளையும், தத்துவங்களையும் மறந்துசெல்வதே அவர்களது துன்பத்திற்குக் காரணமாகும். ஈழத்துச் சித்தர்களும், உலக ஞானிகளும் இந்துசமய கலை, கலாசாரத்தை, பாரம்பரியத்தைப் பரவலாக செயல்படுத்துகிறார்கள். இதனடிப்படையில்தான் தமிழும், சமயமும் இன்று உலகில் அன்பையும், அறத்தையும் போதிக்கின்றன.''

கிளிநொச்சி குருகுல சகோதரி புலவர் சி. விசாலாட்சி பேசுகையில் கூறியதாவது:- நாம் ஒவ்வொருவரும் மக்களுக்கு நல்வாழ்வு கொடுக்க பாரம்பரியமாக மக்கள் வாழ்ந்த வாழ்க்கையினைப் பின்பற்றிச் சமய உணர்வைக் கொண்ட மக்களை உருவாக்க வேண்டும்.''

''இக்கால மாணவர்களின் மனதில் சமயப்பற்றை வேரூன்றச் செய்யவேண்டும். நம் மத்தியில் இருக்கின்ற அறநிலையங்கள் யாவும் ஒன்றுகச் சேர்ந்து சிறப்பாகச் செயல்படவேண்டும். எமது நாட்டில் நல்ல உள்ளங்களைக்கொண்ட ஆண், பெண் தியாகிகளை உருவாக்க பொதுஸ்தாபனங்கள் முன்வர வேண்டும். நமது நாட்டிற்குத் தொண்டு செய்யத் தொண்டர்கள் அணியணியாக முன் வரவேண்டும். அத்தோடு மட்டும் நின்றுவிடாமல் சைவ சமயப் பண்பாட்டை விரிவுபடுத்தவும் ஆவன செய்ய வண்டும்'' என்றார். (107)

## சட்டவிரோத மது விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது

(மட்டுவில்)

சட்டவிரோதமான மது பான விற்பனைகள் அனைத்தையும் விடுதலைப் புலிகள் தொழிலாளர் பேரவை தடைசெய்துள்ளது.

பேரவையின் சுவரொட்டிகள் மூலமும் தென்மராட்சிப் பகுதியில் ஒலிபெருக்கிமூலமும் இத் தடை விதிப்பு பகிரங்கப் படுத்தப்பட்டுள்ளது. இது பற்றி மேலும் குறிப்பிடப் பட்டிருப்பதாவது; சொந்த வீடுகளிலோ தனிப்பட்ட வியாபார நிலையங்களிலோ கள், சாராயம் வைத்து விற்பனை செய்வதற்கு முற்றுக தடை செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது உள்ள அமைதிச் சூழலில் சமுதாய சீர்கேட்டை தவிர்த்துக்கொள்வதற்கு இப்படியான செயல்கள் முற்றுக தடைசெய்யப்பட்டுள்ளது. தமிழினத்தின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு சட்டரீதியான சங்கங்களின் ஊடாக இந்த மதுப்பொருட்களை விற்பனை செய்யவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (82)

## 'பனைவள ஆய்வுகள் எதிர்காலத்திற்கு உதவும்'

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்தி சபை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி சபை அனுசரணையுடன் பனைவள அபிவிருத்தி ஆய்வுகள் தொடங்கியுள்ளன என்று யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன், ஆய்வு தொடர்பான அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

பனைவளம் பற்றிய அபிருத்தி குறிப்பாக பனை அபிவிருத்திச்சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஒழுங்கான முறையில் வழிநடத்தப் பட்டுவருகின்றது.

வட-கிழக்குப் பிரதேசங்களிலுள்ள இப்பாரம்பரிய வளத்தினை தற்கால தேவைகளுக்கேற்ப விருத்தி செய்து அதிலிருந்து கூடுதலான பயனைப்பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இப்பிரதேசத்தின் பொருளாதார சமூக அபிவிருத்தியில் பனைவளம் பிரதான இடத்தினை வகிக்கின்றது.

பனை மரங்களின் எண்ணிக்கை, அவற்றின் தன்மைகள் அவற்றின் நிலப்பரப்பு தொடர்பாகவும், பனையினை நம்பி வாழும் குடும்பங்கள் பற்றிய சமூக பொருளாதார நிலமைகளையும் பற்றிய ஆய்வுகள் வெளிக்கள தகவல்களின் அடிப்படையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

உ. அ. அதிபர் பிரிவுகள், கிராம சேவகர் பிரிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இவ்விரு ஆய்வுகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

மேலும். பனம் பொருள் சந்தைப்படுத்துதல் அதனுடன் தொடர்பான குடிசைக் கைத்தொழில்களின் வளர்ச்சி பெண்களின் பங்களிப்பு, பனம் பொருள் அபிவிருத்தியில் தொழில் நுட்பத்தின் பங்களிப்பு முதலான விடயங்கள்பற்றியும் ஆய்வுகள் தொடங்கியுள்ளன.

திட்டமிடப்பட்டுள்ள ஆய்வுகள் பனைவள அபிவிருத்தியினை எதிர்காலத்தில் வழிநடத்த உதவும்.

# கிழக்கு செய்திகள்

## எழுச்சிக் கூட்டம்

அன்னை பூபதியின் நினைவாக திருகோணமலை கிராமங்களில் ஏப்ரல் முதலாம் திகதி முதல் 11ம் திகதி வரை எழுச்சிக்கூட்டங்கள் நடத்தப்படவிருக்கிறது. திருமலை நகரப் பகுதியில் ஏப்ரல் 15ம் திகதி முதல் தொடர்ந்து அன்னை பூபதி நினைவு கூட்டங்கள் நடைபெறும்.

## தபால் பொதிகள்

கடந்த இரண்டரை ஆண்டுகள் இடைவெளியின் பின்னர் மட்டக்களப்பு - கொழும்பிற்கான தபால் பொதிகள் இரவு ரயில் மூலம் எடுத்துச்செல்லப் படுகிறது.

இச்சேவை நேற்று முதல் அமுல்படுத்தப்படுகிறது.

## சுழற்சிமுறை உண்ணாவிரதம்

அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாமாங்கத்தில் சுழற்சி முறையிலான உண்ணாவிரதம் நடைபெற்றது. விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன் உட்பட விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் இவ் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில்

மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலும் நேற்று முன்தினம் அன்னை பூபதியின் 2ம் வருட நினைவாக உண்ணாவிரதம் நடைபெற்றது.

இதேவேளை ஆரையம்பதி, வந்தாறுமூலை போன்ற இடங்களிலும் உண்ணாவிரதங்கள் நடைபெற்றன.

## ஆசிரியர் நியமனம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 22 கலை, விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களும் 24 உடற்கல்வி ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டிருப்பதாக கல்விப் பணிப்பாளர் திரு கு சோமசுந்தரம் தெரிவித்தார். ஏனைய வெற்றிடங்கள் மேலும் நிரப்பப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## அம்பாறையில் அஞ்சலி

அன்னை பூபதியின் நினைவையொட்டி அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து அஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. வீதிகள் தோறும் அன்னை பூபதியின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளது. சந்திகளில் பந்தல்கள் அமைக்கப்பட்டு நிறைகுடங்கள் வைக்கப்பட்டுள்ளன. கடைகள் வாகனங்களில் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

## இலவச கொப்பிகள்

ஏறுவூர் முஸ்லிம் கல்வி அபிவிருத்தி சபை வருடாவருடம் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக கொப்பி வழங்கி வருகின்றது. அதேபோல் இவ் வருடமும் 9 முஸ்லிம் பாடசாலைகளில், கல்வி கற்கின்ற ஏழை மாணவர்களுக்கு இலவசமாக கொப்பிகள் அல் அஸ்ஹர் வித்தியாலயத்தில் வழங்கப்பட்டது.

## பாலர் பாடசாலை

மீராவோடை மேற்குகிராம சேவகர் பிரிவு ஜனசக்தி உதவி பெறுவோரினால் மீராவோடை பாலர் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப் பாடசாலையை வாழைச்சேனை கோறளைப்பற்று உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். வரதராசன் ஆரம்பித்துவைத்தார். கிராமசேவை உத்தியோகத்தர் ஜனாப். ஈ. எல். லெவ்வைதம்பி தலைமையில் நடைபெற்றது.

## வைக்கோல் கொள்வனவு

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் வாழைச்சேனை ஆலை, பெரும்போக வேளாண்மை அறுவடையில் வைக்கோல் கொள்வனவு வேலைகளை செய்துள்ளது.

## ஆரம்ப பாடசாலை

குச்சவெளி சல்லிமுத்தல் பகுதியில் ஆரம்ப பாடசாலையை அமைத்து அப்பகுதி குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுமாறு கோரப்பட்டுள்ளது.

## கிராம ரீதியில் அபிவிருத்தித் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனங்களின் உதவியால் கமநலச்சேவைத் திணைக்களம் கிராம மட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது.

இதன் பிரகாரம் உடுவில், அம்பன், புலோலி போன்ற கிராமங்களில் புதிதாக வீதிகள் அமைத்தும், மழை நீர் தேங்கி நிற்காமல் பல வாய்க்கால்களையும் ஏற்படுத்திவருகின்றது.

இவ்வாய்க்கால்களை பொது மக்கள் சிலர் துஷ்பிரயோகம் செய்துவருகின்றனரென கமநலச்சேவை திணைக்கள சிரேஷ்ட ஆணையாளர் தெரிவித்தார்.

வெள்ளத்தைப் பாதுகாத்தலிலும்,மிதமிஞ்சியநீரை வெளியேற்றுவதிலும் பயன்பட வேண்டிய வாய்க்கால்களில் குப்பைகள் போட்டு சேதப்படுத்தவேண்டாம் என ஆணையாளர் கேட்டுள்ளார். (152)

## இலவச சமயபாட வகுப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி–நுணுவில் ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையினர் இலவச சமயபாட வகுப்பு, கூட்டுப் பிரார்த்தனை, சிரமதானப்பணி, தொண்டர் சேவை போன்ற பணிகளைச் செய்ய முன்வந்திருக்கிறார்கள்.

சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கு ஜெகதீஸ்வரக் குருக்களால் இவ்வகுப்புக்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

## அரச ஊழியர்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பாக திணைக்களங்களில் இடமாற்றச் சபைகள் நிறுவவேண்டுமென்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் தமிழ்ப்பகுதியிலுள்ள அரசாங்க அதிபர்களைக் கடிதமூலம் கேட்டுள்ளது.

இந்த இடமாற்றச் சபையில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்திற்கும் ஒரு பிரதிநிதித்துவம் வழங்குமாறு கேட்டுள்ளார்கள்.

பல்கலைக்கழகம் செல்ல

# குறைந்தளவு மாணவர்களுக்கே சந்தர்ப்பம் கிடைக்கிறது - ஜனாதிபதி

(பண்டாரகம)

பல்கலைக்கழக பிரவேசத்துக்கு தகுதி பெறும் சுமார் 30,000 மாணவர்களில் 6000 பேர் மட்டுமே பல்கலைக்கழக பட்டப்படிப்பை மேற்கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது.

இது இளஞ் சந்ததியினருக்கு இழைக்கப்படும் ஒரு சமூக அநீதி. இக்குறைபாட்டைநீக்க அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

9வது மகாபொல கொண்டாட்டம் பண்டாரகம மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம்நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம், சுமார் 20,000 பட்டதாரி மாணவர்கள் பயனடைந்துள்ளனர் என்றும், குறிப்பாக வசதி குறைந்த மாணவர்களுக்கு இத்திட்டம் ஒரு வரப்பிரசாதமென்றும் கூறினார். (அ)

---

பாடசாலை

## அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

[உடுவில்]

பாடசாலைகளின் வளர்ச்சி அதன் பெற்றோர்கள் கையில் தான் தங்கியுள்ளது. பெற்றோர்கள் தம் பிள்ளைகளை பெரிய பாடசாலைகளுக்கு மாற்றுமல் தத்தம் கிராம பாடசாலைகளில் பயிலவைத்து அப்பாடசாலையும் பெரிய பாடசாலைகளின் தரத்துக்கு வளரக்கூடியதாக மாற்றி அமைக்க வேண்டும்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய இணைத்துணை அதிபர் திரு. ஆ. கல்யாண சுந்தரேசன் கூறினார்.

மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டம் அதிபர் திரு. அ. மு. அருணசலம் தலைமையில் நடைபெற்றது.

---

## விபத்துக்கள்

### சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சைக்கிள் விபத்து ஒன்றில் ஒரு சிறுவன் படுகாயமடைந்தான்.

இரண்டு சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதால் சிறுவனின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

கொக்குவில் தவராஜா பிரபாகரன் (வயது 12) என்ற சிறுவனே காயமடைந்தவராவார்.

ஃ

### நடத்துநர் காயம்

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மினிபஸ், மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத்தெரு பிரதானவீதிச் சந்தியில் இடம்பெற்ற இவ் விபத்தில் மினிபஸ் நடாத்துநரான இராசரட்ணம் ரஜீவ் (வயது 19) என்பவரே படுகாமடைந்தவராவார்.

ஃ

### வயோதிபப்பெண் காயம்

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் வயோதிபப்பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் சிவன்கோவில் முன்வீதியில் இடம்பெற்ற இவ் விபத்தில் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மீனும்பிகை சுப்பிரமணியம் [வயது 60] என்ற வயோதிபப் பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

ஃ

### மாணவன் காயம்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சைக்கிள் விபத்தொன்றில் ஒரு மாணவன் படுகாயமடைந்தார்.

பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த இம் மாணவனை சைக்கிளில் வந்தவர் அடித்துவிட்டு ஓடிமறைந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ் விபத்தில் யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த ஆரோக்கியநாதன் கபிலன் (வயது 6) மாணவனே காயமடைந்தவராவார்.

ஃ

### இளைஞர் காயம்

உருத்திரபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உழவு இயந்திரம் - மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

உருத்திரபுரத்தைச் சேர்ந்தவரும், மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவருமான பாரதிதாஸ் (வயது 19) என்ற இளைஞரே படுகாயம் அடைந்தவராவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (56)

---

## சத்தியவான் சாவித்திரி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கு ஸ்ரீ வஞ்சியாரண்ய அம்பாள் ஆலயத்தில் சத்தியவான் சாவித்திரிக் கதைக்காவிய படனம் செய்து தினமும் பயன் கூறப்பட்டுவருகிறது.

கற்புநெறி சைவநெறி என்பதை மகளிர் பேணி வாழ வேண்டும் என்று சைவப்புலவர் திரு. கு. மகாலிங்கம் விரிவுரையின்போது விளக்கம் அளித்தார்.

---

## ஹாட்லி மாணவன் முதலிடம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைகொத்தணிப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான மூன்று போட்டிகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் செல்வன் சிவாரஜசிங்கம் குலஇந்திரன் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளார்.

19 வயதுக்குட்பட்டோருக்கான 100 மீற்றர், 200 மீட்டர் ஓட்டப் போட்டிகளிலும் நீளம்பாய்தலிலுமே முதலாம் இடங்களைப் பெற்றுக்கொண்டார். இப்போட்டிகள் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. (52)

---

"எமது சமுதாயத்தின்

# கலாசார மேம்பாட்டுக்கான நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்"

## - விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி

(யாழ்ப்பாணம்)

நாகரிக வளர்ச்சி என்பது வெளிநாட்டு நடைமுறைகளை அப்படியே பின்பற்றுவதல்ல எமது சமுதாயத்தின் கலாசார மேம்பாட்டுக்குரிய நடைமுறைகளையே தாம் பின்பற்ற வேண்டும்.

விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணியினர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

எமது கலாசாரத்தை மேம்படுத்துவோம்! எதிர் வரும் சித்திரை மாதம் 14ம் திகதி தமிழ்ப்புதுவருடம்பிறக்கிறது. எமது தாயகம் இன்று முழுமையான சுதந்திரம் பெற்ற பூமியாகத் திகழவில்லை என்றாலும் கடந்த சில வருடங்களாக எமமக்கள் அனுபவித்து வந்த இன்னல்கள் இன்று குறைந்துவிட்ட நிலையில், வருகின்ற புத்தாண்டை ஆனந்தம் கலந்த ஆர்வமுடன் வரவேற்க மக்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றனர். இது இயல்பானதே.

நாட்டில் இப்பொழுதே புத்தாண்டுக்களை தோன்றிவிட்டது. ஒவ்வொரு பிரதேசத்தில் உள்ளவர்களும் தத்தமது வாழ்நிலைமைகளுக்கும் கலாச்சாரப் பாரம்பரியத்திற்கும் ஏற்ப கலை கலாச்சார நிகழ்ச்சிகளை வரும் புத்தாண்டு தினத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்துகொண்டு இருக்கிறார்கள்.

இதேவேளை புத்தாண்டு விழா நிகழ்ச்சிகளில் ஒன்றாக 'சித்திரை நங்கை'ப் போட்டி நடைபெற இருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது.

ஒவ்வொரு அரசாங்க அதிபர்களுக்கூடாகவும் 'சித்திரை நங்கைப்' போட்டியை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சி மூலம் அழகில் சிறந்த யுவதி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு அவர் 'சித்திரை நங்கை' எனப்பெயர் சூட்டப்படுவார்.

தெரிவு செய்யப்படும் நங்கைக்கு சூட்டப்படும் பெயரில் மாற்றம் ஒன்றைத்தவிர இந்த 'சித்திரை நங்கை'ப்போட்டிக்கும், ஆபாச அங்க அசைவுகளுடனும், அரைகுறை உடைகளுடனும் வெளிநாடுகளில் நடைபெறும் அழகு ராணிப் போட்டிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

பெண்களை அழகு என்ற பெயரில் அசிங்கமாக்குகின்ற இத்தகைய அழகுப் போட்டிகளையும், இப்போட்டிகளின் மூலம் எமது கலாசாரத்தை சீரழித்து எமது போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்கின்ற நடவடிக்கைகளையும் நாம் அனுமதிக்கமுடியாது.

எமது தேசத்தின் விடுதலைக்காக, எமது சமூக பொருளாதார அரசியல் தனிததுவத்தை பேணுவதற்காக நாம் இன்று எத்தனையோ உயிர்களைத்தியாகம் செய்து, இரத்தம் சிந்திப் போராடிக்கொண்டிருக்கிறோம் உன்னதமான இந்தப் போராட்டத்தில் தமதுபங்கை உணர்ந்து இன்று ஆயிரக்கணக்கான பெண்கள் ஆயுதம் தாங்கிய போராளிகளாகியுள்ளனர். பல்லாயிரக்கணக்கான பெண்கள் போராட்டத்திற்கென தம்மை அர்ப்பணிக்க மனப்பூர்வமாய் முன்வந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் பெண்களின் விடுதலையை பின்தள்ளும் வகையில் அமைந்ததும், எமது தனித்துவமானகலாசாரத்தை சின்னபின்னப்படுத்துவதனூடாக எமது விடுதலைப் போராட்டத்தினை கொச்சைப் படுத்தும் வகையில் அமைந்துள்ளதுமான இந்த 'சித்திரை நங்கை'ப் போட்டிக்கு என்ன அவசியம் வந்தது?

ஒரு இனத்தின் தனித்துவத்தைக் காட்டுவது அதன் கலாசாரமே. தமிழினத்தின் தேசியத் தன்மையைக் குன்றச் செய்யக்கூடிய இது போன்ற கலாசாரச் சீரழிவு நிகழ்ச்சிகள் ஒருபோதும் எம் மண்ணில் இடம்பெறுதவாறு நாம்பார்த்துக்கொள்ளவேண்டும்.

இப்படியான கலாச்சார சீரழிவு நடவடிக்கைகளில் எம்மக்களில் ஒரு சிலர் ஈடுபடுவதும், இப்படியான சிந்தனைகளை மக்கள் மனதில் தூண்டி விடுவதும், ஊக்குவிப்பதும் எத்தனை கேவலமானது?

காலத்தின் தேவைக்கேற்ப எமது பாரம்பரியத்தை, எமது கலாசாரத்தை வெளிப்படுத்தக்கூடிய, வளர்க்கக் கூடிய பெண்களின் தேசத்தின் விடுதலைக்கான எழுச்சியை ஊட்டக்கூடிய எத்தனையோ நிகழ்ச்சிகளை நாம் நடத்தலாம்.

எம்மக்களின் தேசிய உணர்வை மழுங்கடிக்கக்கூடிய இது போன்ற கீழ்த்தரமான நிகழ்ச்சிகள்எம்மண்ணில்இடம் பெறுதவாறு எம்மக்கள் அனைவரும் ஒருமித்த சிந்தனையுடனும், தெளிவான நோக்குடனும் செயற்படவேண்டும்.

தமிழீழப் பிரதேசத்தின் எந்தவொரு மூலையிலாவது இதுபோன்ற கலாசாரச் சீரழிவுகள் இடம்பெற அனுமதிக்க முடியாது.

இதுபோன்ற கலாசார சீரழிவு நடவடிக்கைகளை ஒழிப்பதன் மூலம் எமது கலாசார மேம்பாட்டுக்காக உழைப்போம் என உறுதி பூணுவோம்.

---

# யாழ்.மாவட்ட கூட்டுறவுசபை கருத்தரங்கு

(காங்கேசன்துறை)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் ப. நோ. கூ. சங்கங்களை நெறிப்படுத்தும்முகமாக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது.

ப. நோ. கூ. சங்கங்களை சிறப்பான முறையில் இயக்குவது, நிதிகளைக் கையாள்வது விற்பனையை அபிவிருத்தி செய்வது, கணக்குகளைத் தயாரிப்பது போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இக்கருத்தரங்குகளில் விளக்கம் அளிக்கப்படுகிறது.

மார்ச் மாதத்திற்கானகருத்தரங்கு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 6 ப. நோ. கூ. சங்கங்களில் இக்கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது. இம்மாதம் 31ம் திகதி தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் இக்கருத்தரங்கு நடத்தப்படுகிறது.

யாழ். கூட்டுறவு இலாகா தலைமைக்காரியாலய பரிசோதகர் திரு. கே. எஸ். அருளானந்தம், கல்வி விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. ம. அ. யேசுராஜா, யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோர் இக்கருத்தரங்கில் உரையாற்றுவர்.

சங்கக் கிளை முகாமையாளர்கள், விற்பனையாளர்கள், மற்றும் ஊழியர்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்றுவர். (86)

---

# "பல்துறைகளிலும் மகளிர் பங்கு இன்று இன்றியமையாதது"

(காங்கேசன்துறை)

"இன்று பல்துறைகளிலும் மகளிரின் பங்கு இன்றியமையாததாக விளங்கி வருகிறது. கூட்டுறவு இயக்கத்திலும் அவர்களின் பங்கு கூட்டுறவு இயக்கத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்கிறது. அவர்களது பணிகள் தொடர வேண்டும்."

இவ்வாறு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் மகளிர் தினவிழா மருதனமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறறபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்துரையாற்றிய யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. செ. நித்தியராஜ் கூறினார்.

கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு. எஸ். சிவமகராஜா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: கூட்டுறவுத் துறையில் கூடுதலான நுகர்ச்சிப் பொருட்களை வாங்குவோரும், பயன்படுத்துவோரும் பெண்களாகவே இருப்பதால் அப்பொருட்களின் தரத்தையும் நியாய விலைகளையும் தீர்மானிப்பதில் அவர்களுக்கு பெரும் பங்கு உண்டு. கூட்டுறவு அடிப்படையில் கல்வி, கலாசார அபிவிருத்திக்கும் அவர்கள் பெரிதும் உழைக்க வேண்டும் என்றார்.

மகளிர் குழுக்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (86)

---

# வடக்கு, கிழக்கு தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு திட்டமிடல் குழு

(காங்கேசன்துறை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களிடையே புரிந்துணர்வையும் சங்க செயற்பாடுகளில் ஒருமித்த தன்மையையும் ஏற்படுத்து முகமாக வடக்கு-கிழக்கு மாகாண திட்டமிடல் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோரையும், கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர்களையும் கொண்டதாக இத்திட்டமிடல் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

1990-91-ம் ஆண்டுக்குரிய திட்டங்களை இத்திட்டமிடல் குழுவே தயார்செய்து சங்கங்களின் செயற்பாட்டுக்குச் சமர்ப்பிக்குமெனவும், இதன் மூலம் வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள தெங்கு-பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரே விதமான செயற்பாட்டைக் கொண்டிருக்க வழி பிறக்குமெனவும் கூறப்படுகிறது.

இக்குழுமூலம் சங்கங்களிடையே புரிந்துணர்வை வளர்க்கமுடியுமெனவும், சங்க உற்பத்திப் பொருட்களின் விலைகள் இடத்திற்கிடம் வேறுபடாமல் இருக்குமெனவும், சங்கங்கள் நல்லுறவு அடிப்படையில் பல திட்டங்களைச் செயற்படுத்த முடியுமெனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (86)

---

## கடனுதவி

(யாழ்ப்பாணம்)

கைதடி, நுணுவில் சிக்கன கடனுதவுச் சங்கம் அங்கத்தவர்களுக்கு ரூபா ஐந்நூறு வீதம் கடன் வழங்க தீர்மானித்துள்ளது. இதற்கான ஏற்பாட்டை செயலாளர் திரு. சி. சிவசுப்பிரமணியம் மேற்கொண்டுள்ளார்.

## குமுளமுனையில்
# 50 வருடங்களின் பின்னர் மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

''பாடசாலை வளர்ச்சி அடைந்தால் தான் அந்தக் கிராமம் வளர்ச்சியடையும். கிராமம் வளர்ச்சியடைந்தால் தான் நகரம் வளர்ச்சியடையும். நகரம் வளர்ச்சி அடைந்தால் தான் அந்நாடு வளர்ச்சியடையும்.''

இவ்வாறு முழங்காவில் குமுளமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிச்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு கி. வேலாயுதம் கூறினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய 50 வருடங்கள் ஆகின்றன. ஆனால் இதுவரை காலமும் இப்பாடசாலையில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தவேண்டிய அளவுக்கு யாரும் அக்கறை செலுத்தியது கிடையாது. குறிப்பாக, இப்பகுதிப் பொதுமக்கள் இப்பாடசாலையின் வளர்ச்சியில் கூடிய அக்கறை செலுத்தினால் தான் வருங்காலத்தில் இப்பாடசாலையின் அபிவிருத்தி வேலைகளைத் திறம்படச்செய்ய முடியும்.''

மெய்வல்லுநர் போட்டி ஆரம்பமாவதற்கு முன்பு, இப்பாடசாலைக்கெனப் புதிதாக உருவாக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவுப் பாறுப்பாளர் திறந்து வைத்து உரையாற்றினர்.

பாடசாலை அதிபர் திரு. தோத்திரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிக்கு சிறப்பு விருந்தினராக முழங்காவில் கொத்தணி அதிபர் திரு. க. சாம்பசிவமும், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ். அமிர்தலிங்கமும், பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே பாலசுப்பிரமணியமும், குமுளமுனை பங்குத் தந்தை வண. பிதா ஜேம்ஸ் யோகநாதனும், குமுளமுனை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. அ. அருணசலம் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்கள்.

மேற்படி விளையாட்டுப் போட்டியில் சாம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:-

7 வயது ஆண் பூ. அன்ரன் ஜேமிஸ், 7 வயது பெண் யோ. சந்திரிக்கா. 9 வயது ஆண் ஞா. சத்தியசேகரன், 9 வயது பெண் பூ. மாக்கிறட்டிவ்னு, 11 வயது ஆண் சா. ஜெயாரூபின்சன் - நா. துஷ்யந்தன் (கூட்டுச் சாம்பியன்கள்) 11-வயது பெண் க. சுகிர்தா, 13 வயது ஆண் சு. சுனித்வத்சலன்-யோ. அருமைநாயகம், 13 வயது பெண் ஞா.பவானி.

இப்போட்டியில் ''விஜி'' இல்லம் 253 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தையும், சைமன் இல்லம் 126 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றன.

இவ்விளையாட்டுப் போட்டியின் செயலாளர் செல்வி கே. ஞானதயா சகல ஏற்பாடுகளை செய்திருந்தார். (வி)

## மாணவர்கள்
# கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்க வேண்டும்

(உடுவில்)

''இழந்த சந்தர்ப்பங்களும் திரும்பவும் நமக்கு கிடைக்க மாட்டாது. எனவே உங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கல்வியில் சிறந்தோராகவும், விளையாட்டில் பயிற்சிபெற்று சிறந்த ஆரோக்கியத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்''

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். காசிநாதன் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசியபோது கூறினுர்?

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

விளையாட்டுக்கள் உள்ளத்துக்கு மகிழ்ச்சியையும் உடலுக்கு வலுவையும் தரவல்லன. இளம பருவத்தில் பழகும் தேகப் பயிற்சி உடலுக்கு வலுவை கொடுத்து நீடிய காலம் சுகதேகிகளாக வாழவைக்கும். உடலுறுதி கல்வியறிவையும் நிலைபெற வைக்கும். எனவே மாணவர்களாகிய நீங்கள் பாடசாலை வாழ்க்கையில் கிடைத்த சந்தர்ப்பத்தை முழுமையாக பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கு திரு. காசிநாதன் பரிசுகள் வழங்கினுர். விழாவுக்கு அதிபர் திரு. கேசவராசன் தலைமைவகித்தார். போட்டி முடிவில் சம்பந்தர் இல்லம் 266 புள்ளிகளைப் பெற்று இவ்வருட சாம்பியன் கிண்ணத்தை பெற்றுக்கொண்டது. இரண்டாம் மூன்றும் இடங்களை முறையே வாகீசர், சுந்தரர் இல்லங்கள் பெற்றுக்கொண்டன.

# இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று 28ம் திகதி யாழ். ஆயர் அதிவந். பீ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். போதனு வைத்திய சாலை மருத்துவபீடப் பேராசிரியர் டாக்டர் டி.ராமதாஸ், டாக்டர் திருமதி ஞானம்பிகை ராமதாஸ் ஆகியோர் இவ் வைபவத்தில் பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொள்ளுகின்றனர்.

### விற்பனை நிலையம்

பனை அபிவிருத்திச்சபை முல்லைத்தீவில் 'கற்பகம்' விற பனை நிலையமொன்றை இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்குத் திறந்துவைக்கிறது.

முல்லைத்திவு உதவி அரசாங்க அதிபரும், பிரதேச சபை விசேட ஆணையாளருமான திரு, வே கந்தசாமி 'கற்பகம்' விற்பனை நிலயத்தைத்திறந்து வைப்பார்.

### தொழிலகம்

முல்லைத்திவு தெங்கு பனம் பொருள் கூட்டிறவுச்சங்கத்தினல் உருவாக்கப்பட்டுள்ள போத்தலில் கள்ளடைக்கும் தொழிலகம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

முல்லைததீவு அரசாங்க அதிபர் திரு க பொன்னம்பலம் இத்தொழிலகத்தைத் திறந்து வைப்பார். (54)

## தமிழர் பிரச்சனைக்கு
# நியாயமான அரசியல் தீர்வு அந்நியதலையீட்டைதவிர்க்கும்
## இல. கம்யூனிஸ்ட் (இடது) அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடந்த முப்பத்திரண்டு மாதங்களில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவம் இம்மாதம் இருபததிநான்காம் திகதியுடன் முற்ருக வாபஸ் பெறப்பட்டுள்ளது. தமிழ் பேசும் மக்களுக்கு பாரிய உயிர்ச்சேதங்களையும், உடைமை நாசங்களையும் ஏற்படுத்தி இலங்கையின் சுதந்திரம் சுயாதிபத்தியத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்துவந்த இந்திய இராணுவம் நமது நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டமையை இலங்கைக் கம்யூனிஸ்கட்சி (இடது) மனப்பூர்வமாக வரவேற்கின்றது.

இந்திய இராணுவம் நமது நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளபோதிலும் இந்திய மேலாதிக்க சக்திகளின் உள்ளார்ந்தஎண்ணங்களும்செயற்பாடுகளும் அற்றுப்போகவில்லை என்பதை நம்நாட்டின் சகல தரப்பு மக்களும் உணர்ந்து முன்னெச்சரிக்கையுடன் இருப்பது அவசியமாகும்,

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மத்திய குழு இலங்கையிலிருந்து இந்திய இராணுவம் வெளியேற்றப்பட்டமை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேற்படி அறிக்கையை கட்சியின் பொதுச்செயலாளர் திரு. சி. கா. செந்திவேல் வெளியிட்டுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில்; ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் மற்றொரு நாடு இராணுவத் தலையீட்டை நடத்துவதன்மூலம் எந்தப் பிரச்னையையும தீர்த்துவைக்க முடியாதென்பதுடன் புதிய பிரச்னைகளை உருவாக்கி விகாரப்படுத்தவே அத்தகைய தலையீடு வழிவகுக்கும் என்பதனை இலங்கைமீதான இந்திய இராணுவ தலையீடு கடந்தமுப்பத்திரண்டு மாதங்களாக எடுத்துக் காட்டியுள்ளது இத்தகைய இராணுத் தலையீடு ஏற்படுவதற்கு இனப்பிரச்னையை மோசமான நிலைக்கு வளர்த்துவந்த அனைத்து ஆளும் வர்க்க அரசியல் சக்திகளும் பொறுப்பாளிகள் என்பதை யாரும் தட்டிக்கழித்திடமுடியாது.

ஆதலால் இலங்கையின் இனப்பிரச்னையை சாட்டாக வைத்து இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியா தொடர்ந்தும் தலையீடு செய்வதைத் தடுக்கக்கூடிய ஒரே வழி இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதற்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு நின்றதுபோல் இனப் பிரச்னைக்கு நியாயமான அரசியல் தீர்வைக் காண்பதிலும் ஐக்கியப்பட்டு விரைவான தீர்வைச் சாத்தியமாக்குவதேயாகும்.

இத்தகைய தீர்வின் பிரதான அம்சமாகத் திகழ்வது தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியபிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றப் பிரச்னையயாகும். நிலம், நீர் உள்ளிட்ட இக்குடியேற்றப் பிரச்சனைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான தீர்வு அவசியமாகும் என்பதனை இவ்வேளை எமது கட்சி குறிப்பாகச் சுட்டிக்காட்டுகின்றது. அதேவேளை சிங்கள, தமிழ் மக்களுக்கிடையிலான சமத்துவத்தையும் அடிப்படை ஜனநாயக அரசியல் உரிமையையும் மதிக்கும்விதத்தில் அதற்குத் தடையாக ஏற்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பிற்கான ஆருவது திருத்தத்தை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததுபோல் நீக்குதல் வேண்டும்

இன்று இந்திய இராணுவம் நமது நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளது. இது தற்செயலானதொன்றல்ல. இந்திய இராணுவத்திற்கு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எழுந்த எதிர்ப்பும், அதன் தாக்குதல் முனையாக தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் தொடுத்த எதிர்த்தாக்குதலும், சிங்கள மக்களின் குமுறல்களால் பிரேமதாஸா அரசு கொடுத்த நெருக்குதல்களும், சர்வதேச ரீதியில் உருவாகி வளர்ந்த கண்டனங்களும், இந்திய மக்களிடம் காணப்பட்ட அதிருப்தியுமே இந்திய இராணுவ வெளியேற்றத்திற்கான காரணங்களாகும்.

இந்திய மேலாதிக்க எண்ணங்களுக்கு கொள்கை வகுப்போர்களையும் அவர்களது அடிவருடிகளையும் தவிர்ந்த அனைத்துதேசபக்த சக்திகளும் இந்திய இராணுவம் வெளியேறிச் செல்வதை வரவேற்கின்றனர். அதேபோல் இலங்கையிலுள்ள இஸ்ரேல் நலன் காக்கு பிரிவும் அகற்றப்பட எடுக்கப்பட்ட அரசின் முடிவானது முற்றிலும் சரியானதும் வரவேற்கக்கூடியதுமாகும். எந்தவொரு அந்நிய சக்தியும் நமது நாட்டில் புகுந்து ஆதிக்கம் செலுத்துவதையோ, அன்றி தமது நோக்கங்களை நிறைவேற்ற முற்படுவதையோ தடுத்து நிறுத்துவதும் எதிர்த்து நிற்பதும் நம் அனைவரினதும் தேசிய கடமையாகும்.

## விபுலானந்தர் முதலிடம்

(மருதங்கேணி)

மாசார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் விபுலானந்தர் இல்லம் கூடிய புள்ளிகளைப் பெற்று சாம்பியனுகியது.

இரண்டாவது இடத்தை நாவலர் இல்லமும் மூன்ருவது இடத்தை ஞானப்பிரகாசர் இல்லமும் பெற்றன. (53

## உதைபந்தாட்டம்
# இன்று இறுதியாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் விளையாட்டுக்கழகங்களிடையே நடத்தப்பட்டுவந்த ''நொக்கவுட்'' உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது,

மேற்படி இறுதியாட்டத்தில் குருநகர் ''பாடும் மீன்'' விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணம் 'முஸ்லீம்ஸ்' விளையாட்டுக்கழகமும் இன்று மாலை பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மோதுகின்றன,

இப்போட்டிக்கு யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார். (வி)

## 100, 200 மீற்றர்
# போட்டிகளில் புதிய சாதனை!

(யாழ்ப்பாணம்)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில், யாழ் மாவட்டத்தில் 100, 200 மீற்றர் போட்டிகளில் நிலைநாட்டப்பட்ட சாதனையை, வீரர் ஆர். சோதிலிங்கம் இம்முறை முறியடித்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

வீரர் சோதிலிங்கம் 100 மீற்றர் தூரத்தை 11.1 விளுடிகளில் ஓடி 14 வருடங்களுக்கு முன்னர் யாழ். பொலிஸ் இலாகா விளையாட்டுக்கழக வீரர் மிஸ்கின் ஏற்படுத்திய சாதனையை முறியடித்து புதிய சாதனையை ஏற்படுத்தினுர்

இவர்200 மீற்றர் தூரத்தையும் 23. 3 - 4விளுடிகளில் ஓடி, 1983ம் ஆண்டு ஏ ஜெயக்குமாரினல் ஏற்படுத்தப்பட்ட சாதனையை முறியடித்து அதிக சாதனையை ஏற்படுத்தினுர்.

வீரர் ஆர். சோதிலிங்கம் 1988ம் ஆண்டு கொழும்பில் தேசிய ரீதியில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் 100, 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில்கலந்துகொண்டு விருதுகள் பெற்றவர்.

இவர் கடந்த வருடம் மணிலாவில் நடைபெற்றஆசிய இளைஞர்மெய்லல்லுநர் போட்டியில் இலங்கைக் கோஷ்டியில் அங்கம் வகித்துச் சென்று அஞ்சல் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்று விருதைப்பெற்றவர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் பயிற்சியாளர் திரு கே டபிள்யூ விமலராஜாவிடம் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது, (வி)

## வாசகர் வட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம்-மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்தின் நூலக வாசகர் வட்டக் கூட்டம் அண்மையில நடைபெற்றது

பல அங்கத்தவர்கள் நூலக வளர்க்கிக்கான திட்டங்களை முன் வைத்ததோடு, புத்தாண்டு தினத்தில் கருத்தரங்கு, கலை நிகழ்ச்சிகள் நடாத்தவும் முடிவு செய்திருக்கின்றனர்.

## மெய்வல்லுநர் போட்டி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலுள்ள இருபது விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான மெய் வல்லுநர் போட்டி. வத்திராயன் உதய சூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று 28ம்திகதி நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிசர் திரு. ரீ. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டிக்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பிரதம விருந்தினராகவும், தலைமைப் பீட உதவி ஆாசாங்க அதிபர் திரு. க சண்முகநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (53)

## கலைவிழா

(மாங்குளம்)

துணுக்காய் பாண்டியன் குளம் பிரதேச ரீதியிலான கலைவிழா யோகபுரம் 3ம் யூனிற் மகாவித்தியாலத்தில் நடைபெற்றது. பிரதேச ரீதியில் நடைபெறும் இப்போட்டி மாவட்ட ரீதியிலும்நடைபெறவுள்ளது. (150)

# வெடி மருந்துகள் பெருமளவில் கண்டுபிடிப்பு

(திருமலை)

பாவனைக்கு உதவாதவை எனக் கருதி இந்தியப் படையினரால் இருபது அடி ஆழப் புதைகுழியில் புதைத்துவிட்டுச் சென்ற வெடி மருந்து வகைகளை இலங்கை பாதுகாப்புப் படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

பாதுகாப்புக் கருதி இவ் வெடி மருந்து வகைகள் அப்புறப்படுத்தப்பட்டு வருவதாகவும், மேலும் இத்தகைய புதைகுழிகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய பாதுகாப்புப் படையினர் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது. (அ)

## நெடுங்கேணியில் போட்டிகள்

(நெடுங்கேணி)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவினர் நெடுங்கேணியில் கலைப்போட்டிகளை நடாத்துகின்றன.

நேற்றும், இன்றும் இந்தப் போட்டிகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ்விழாவில் விசேடமாக கலை, கலாசாரப் பிரிவால் தயாரிக்கப்பட்ட ''களத்தில் காத்தான்'' என்ற நாடகமும் ''நல்லதைச் செய்வோம்'' என்ற வில்லிசையும் இடம்பெறுகின்றன.

### துணுக்காயிலும்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை, கலாசாரப் பிரிவால் துணுக்காய் பாண்டியன்குளப் பிரதேசத்தில் கடந்த 24-ம், 25-ம் திகதிகளில் யோகபுரம் ம. வி. யில் போட்டிகள் நடைபெற்றன.

கடந்த 24-ம் திகதி பிரதம விருந்தினராக வன்னிப்பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரனும், மல்லாவி கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. சிவராசாவும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

கடந்த 25-ம் திகதி நடைபெற்ற விழாவில் பிரதமவிருந்தினராக வன்னிப் பிராந்திய கலை, கலாசாரப் பொறுப்பாளர் திரு. போசனும், முல்லை மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர் திரு. மெற்ருஸ் மெயிலும், முல்லை மாவட்ட கலை, கலாசரரப் பொறுப்பாளர் திரு சங்கரும், துணுக்காய் பாண்டியன்குள பிரதேசப் பொறுப்பாளர் திரு. ஜொனியும் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்கள்.

அன்றைய தினம் போட்டிகளும் நடைபெற்றன. அதில் கௌரவ நிகழ்ச்சிகளாக ''பண்டாரவன்னியன்'' நாடகமும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ''நல்லதைச் சொல்வோம்'' என்ற வில்லிசையும் இடம்பெற்றன

## சமூகசேவையாளர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர், பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத் தலைவராகவும், இந்து அறநிலைய ஆணைக் குழுவின் செயலாளராகவும் கடமையாற்றியவர்.

## மக்கள் முன்னணியின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் நகரப் பகுதிப் பொறுப்பாளர் திரு. நிமால் மேலும் பேசுகையில்;

''இன்று கிளிநொச்சி நகரம் அபிவிருத்தியில் குன்றி, பலவித சீர்கேடுகளை அடைந்துள்ளது. நகரத்துப் பொதுச் சந்தை மிகவும் அவலநிலையில் உள்ளது.

'வீதிகள் எல்லாம் சேதம் அடைந்துள்ளன. வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக குப்பைகள் மண்டிச் சுகாதாரச் சீர்கேட்டை எட்டியுள்ளன.

''தேநீர்க் கடைகளில் சுத்தம் அறவே இருப்பதில்லை. உணவின் தரமும் குன்றியுள்ளது. இந்த நிலைமைகள் தொடர்ந்து நீடிக்கக்கூடாது. கிளிநொச்சி நகரை நல்ல முன்னேற்றமுள்ள நகரமாக மாற்றவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழரின் நல்வாழ்வை, சுதந்திரத்தைக் குறிக்கோளாகக் கொண்டு என்றும் விளங்கும். தமிழீழப் பகுதியின் அபிவிருத்திப் பணிகளிலும் அக்கறையுடன் செயற்பட்டுவருகிறது'' என்ருர். (83)

## ஆயுத ஒப்படைப்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு தனிப்பிரிவில் ஆயிரம் பேர் கொண்ட படைப்பிரிவு அமைக்கப்படும் இதற்கமைய 25 மாவட்டங்களிலும் 25,000 பேர் கொண்ட இராணுவப் பிரிவு அமைக்கப்படும் கடற்படை விமானப்படை பிரிவுகள் விசேட சேவைகளாக அமைவதால் இவற்றில் பெருந்தொகையானோர் இடம் பெறமாட்டார்கள்.

இராணுவத்தை பொறுத்தவரை கடந்த இரு வருடங்களில் கொள்வனவுசெய்யப்பட்ட ஆய்தங்களும் அளிக்கப்பட்ட பயிற்சிகளும் போதமானதாகும். மேலும் அதிநவீன ஆயுதங்கள் இராணுவத்திற்கு தேவைப்படாது நாட்டில் எதிர்காலத்தில் எந்தவித மோதல்களும் இடம்பெறுவதைத் தடுக்கும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் ஆயுத நடவடிக்கைகளிற்கு அவசியம் ஏற்படாது.

இனிமேலும் நாம் எதனையும் விரயமாக்க விரும்பவில்லை. பாதுகாப்புதுறை செலவீனம் தொடர்பான மதிப்பீடுகளை நான் மேற்கொள்ளவுள்ளேன். தோட்ட நிர்வாகி என்ற முறையில் எனக்கு நல்ல அனுபவம் உள்ளது.

## தமிழ் மக்களுக்கு சுய அதிகாரம்

தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்காக அவர்களுச்கு சுய அதிகாரம் வழங்கும் பொருட்டு இலங்கை அரசு விடுதலைப்புலிகள் அமைப்பினருடன் ஒப்பந்தம் ஒன்றைச்செய்து கொள்ளும்.

## சர்வஜன வாக்கெடுப்பு

வடக்கு-கிழக்கு மாகாண இணைப்புத் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு பற்றி அமைச்சர் குறிப்பிடுகையில், அம்பாறை மாவட்டத்தில் சிங்கள-முஸ்லிம் மக்கள் வசிப்பதனுல் இது பற்றிப் பொதுவான அபிப்பிராயம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கலந்தாலோசிக்கப்படும்.

இலங்கையர் என்ற வகையில் சகலருக்கும் பாதுகாப்பு வழங்கவேண்டிய கடப்பாடு அரசுக்கு இருப்பதாகவும் அமைச்சர் கூறினர்.

இக்கலந்துரையாடலில் இந்தியத் தூதர் திரு. எல். எல், மெஹ்ரோத்ராவும் கலந்து கொண்டார்.

## இந்திய படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கும்-இந்தியாவுக்கும் இடையில் உறவு நிலை மேலும் அபிவிருத்தி அடையுமென்று அமெரிக்கா நம்புகிறது. நாட்டில் குழப்பநிலை நீங்கி, முன்னேற்றம் தோன்றுவதற்கு அறிகுறியாக இந்தியப் படை வெளியேற்றம் அமைந்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

## வடக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இவற்றின் மூலம் வடக்கு-கிழக்கின் பொருளாதார நிலையை முன்னேற்றலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (சி)

## நேற்று கொடித் தினம்

[கிளிநொச்சி]

செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டகொடித் தினம் நேற்று செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் வண. பிதா ஜெபநேசன் அடிகளார் தலைமையில் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எஸ். மாணிக்கவாசகர் முதல் கொடியைப் பெற்று கொடி விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திரு. எஸ். சிவராசலிங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (83)

# புதிய அமைச்சரவையில் ஆற்றல்மிக்கவர் இடம்பெறுவர்

(கொழும்பு)

புதிய சவால்களைச் சந்திக்கும் ஆற்றல் மிக்கவர்களைக் கொண்ட விதத்தில் அமைச்சரவையை மாற்றியமைக்கவுள்ளேன்.

அரசாங்க பாராளுமன்ற விசேட கூட்டம் நேற்று ஜனுதிபதி செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது ஜனுதிபதி திரு. ஆர் பிரேமதாசா மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:-

பல்வேறு பணிகளில் மக்களை பங்குகொள்ளச் செய்வதற்காக அரசாங்கம் தற்போது விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்

- ஜனுதிபதி

றது பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகள் நிச்சயம் காணக்கூடியதாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன் என்ருர். (அ)

## இன்று முதல்

(கொழும்பு)

கண்டதும் கொடுப்பனவுக் கட்டளை, என்ற பெயரில் ஒருபுதிய நிதிமாற்றுமுறையை இலங்கைவங்கி தனது வரலாற்றில் முதல்தடவையாக இன்று முதல் நாடு முழுவதிலும் அறிமுகம் செய்கிறது.

## அடகு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மையும், வெள்ளிக்கிழமையும், நெல்லியடிக் கிளையில் 1989 செப்டம்பர் 15ம் திகதி வரை பணம் செலுத்தியோருக்கு வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் அடகு நகைகள் வழங்கப்படும்.

சுன்னுகம் மக்கள் வங்கிக் கிளையில் 1989 ஒக்டோபர் 9-ம் திகதி வரையும், காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளையில் 1989 செப்டம்பர் 22-ம் திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு வெள்ளிககிழமையும் சனிக்கிழமையும் நகைகள் மீளளிக்கப்படும்.

குறிக்கப்பட்ட நாட்களில் 8-30 மணி தொடக்கம் நண்பகல் 1-00 மணிவரை இந்த அடகு நகைகள் மீளளிப்புச் செய்யப்படும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி ரசீது, ஆகியவற்றுடன் சமுகந்தந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பிராந்திய முகாமையாளர் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள மற்றைய கிளைகளின் நகைகள் அடுத்தமாதம் 3ம் திகதிமுதல் மீளளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா மயில்வாகனம்

கொக்குவிலைச் சேர்ந்த திருமதி கனகம்மா மயில்வாகனம் காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற மயில்வாகனம் (இளைப்பாறிய ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், கமலேஸ்வரி, சரஸ்வதி (இளைப்பாறிய ஆசிரியை, யாழ்/ இந்து மகளிர் கல்லூரி), இராமநாதன் (நைஜீரியா). பத்மநாதன் (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), இராசநாயகம் (காரியதரிசி, மேல்மாகாண சபை ஆளுநர்), அனுஷியா (ஆசிரியை, கனகரத்தினம் ம. ம. வி.), சாவித்திரி (இளைப்பாறிய ஆசிரியை, திருக்குடும்பக் கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. வைத்திலிங்கம் (டாக்டர்), ஞானசம்பந்தன் (இளைப்பாறிய விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), மகேஸ்வரி, கமலா, புஷ்பா (இளைப்பாறிய ஆசிரியை. புனித ஜொன்பொஸ்கோ), யோகாம்பிகை (பேராசிரியை, கொழும்பு பல்கலைக் கழகம்), கோடீஸ்வரன் (தபாலதிபர், நெடுங்கேணி), உமாமகேஸ்வரன் (இளைப்பாறிய ஆசிரியர், சேர். கனகசபை வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும், நிஷாஹரன், திருமதி குகப்பிரியை, குமரேசன். சிவைப்பிரியை, பிரதீப்குமார், சுபஜு, சாரங்கன். சிறீதா, லம்போதரன், பரமதரன், பிரகாஷ், கேதீசன், செந்தூரன், ஆரணி, ஏரகன், ருஷாங்கன், சுதேஷ்ஞு, சுமுகன், சேக்கிழான் ஆகியோரின் பாட்டியும், பரமனின் பூட்டியுமாவார். அன்னுரின் இறுதிக்கிரியைகள் இன்று 28-03-90 புதன்கிழமை மாலை 4-00மணியளவில் கொச்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதனை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;-

திரு. பத்மநாதன்

C. M. S, ஒழுங்கை,
குளப்பிட்டி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (சி-3655)

## மரண அறிவித்தல்

### முருகேசு வைரமுத்து

(சென். ஜோன் பழைய மாணவர் சங்கத்தலைவர்)

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாய் தெற்கில் வசித்தவருமான மு. வைரமுத்து J. P. (முன்னைநாள் சி. சி. எஸ் ) காலமாகிவிட்டார். இவர் திருமதி பூ. மகாலட்சுமியின் அன்புக்கணவரும் திருவாளர்கள் சிவகுமார், வரதகுமார், நிருத்தகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். அன்னுரின் தகனக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

தகவல்: மனைவி, மக்கள்

''குமர புரம்''
லோட்டன் வீதி,
மானிப்பாய். (சி-3657)

### திரு. தியாகராசா அம்பலவாணர் (தம்பிராசா)

மஞ்சத்தடி, இணுவிலைச் சேர்ந்த திரு. தியாகராசா அம்பலவாணர் (தம்பிராசா) 90-03-27ம் திகதி காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற தியாகராசா பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும், லோகநாயகி, தியாகராசா (லண்டன்), காந்தி (லண்டன்), சுகுமார் (கனடா), இந்துமதி (கனடா), சிறிதரன் (கனடா), சந்திரகுமார் (மோகன்) லண்டன், ஆகியோரின் அன்புத்தந்தையும், திரு. தி சண்முகராசாவின் (வை சி. கடை, இணுவில் சந்தி) அன்புச் சகோதரரும், திரு மகாதேவன் (T. A. கொழும்பு), திரு. கருணனந்தன் (கனடா), கேமாங்கனி (லண்டன்) தங்கா (கனடா), சத்தியா (கனடா), நிம்மி (கனடா), ஆகியோரின் அன்பு மாமனுரும், அருள் வண்ணன். கங்காநிதி, சங்கர். லக்ஷன், அருந்தா, சாயிசன், சுயன், அபிரா, துஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னுரின் இறுதிக்கிரியைகள் இன்று 90-3-28ம் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு மஞ்சத்தடியிலுள்ள ராஜபதி' இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இதனை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: அ. சந்திரகுமார் (மோகன்)

''ராஜபதி''
மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு, இணுவில். (சி-3656)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.